பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 11 வியாழக்கிழமை 27.08.2020 கதிர் 291

**இது ரகசியம் அல்ல!**

அரசியலுக்காக எதுவும் பேசலாம் என்று இல்லை. பேச்சிலும் சில நாக ரிகங்கள் - நளினங்கள் பேணுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்தார் என்று நேற்று ஒரு செய்தி வெளியானது. அப்படி செல் வம் கூறியிருப்பார் என்று நம்புவது கடினமாக இருந்தது.

2

# அரசமைப்பின் 13, 19 திருத்தங்களில் சர்வதேசத்தின் கவனம் மிகஅவசியம்

## திருமலையில் அமெரிக்கத் தூதுவருடனான நேற்றைய சந்திப்பில் சம்பந்தன் வலியுறுத்து



(அப்துல் சலாம் யாசீம்)

திருமலை, ஓகஸ்ட் 27

**அரசமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தத்தங்களில் புதிய அரசு மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.**

**கூட்டமைப்பின் தலைவருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸுக்கும் இடை யிலான முக்கிய சந்திப்பு திருகோண மலையில் நேற்று நடைபெற்றது.**

2

## செப்ரெம்பர் 3ஆம் திகதி அமைச்சரவையில் '20'

கொழும்பு, ஓக 27

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 3 ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி தலைமையிலான அரசின் அமைச் சரவைக் கூட்டம் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையில் நேற்றுக் காலை ஜனா திபதி செயலகத்தில் நடைபெற் றது.

2

## புத்தளத்தைச் சேர்ந்த 3 படகுகள் வடமராட்சி கடலில் கைப்பற்றல்

### மீனவர்கள் தப்பியோட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.27

புத்தளத்திலிருந்து வந்து வட ம ராட்சி கடற்பரப்பில் சட்டத்துக்குப் புறம் பான கடற்றொழிலில் ஈடுபட்ட 3 பட குகள் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் அதிகாரிகளால் கைப்பற் றப்பட்டன.

படகுகளைக் கைப்பற்றிய

2



## ரூ. 42 கோடி பெறுமதியான ஹெரோயின் நேற்று மீட்பு!

### துப்பாக்கிகளும் சிக்கின

கொழும்பு, ஓக 27

அங்கொட லொக்காவுடன் நெருங்கிய தொடர் புகளைப் பேணிய சந்தேகநபர்களிடமிருந்து 42 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோயின் மற்றும் துப்பாக்கிகள் உள்ளிட் டவை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

2

## மைத்திரிபாலவிடம் நேற்று 9 மணி நேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஓக 27

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குவின் பொலிஸ் விசார ணைப் பிரிவு நேற்று முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வாக்குமூலம் பதிவு செய்தது.

சுமார் 9 மணித்தியாலத்துக்கும் மேல் மைத்திரிபாலடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

விசாரணைப் பிரிவில் முன்னி லையாகும்படி முன்னாள் ஜனாதிப திக்கு அறிவுறுத்தல்

2

## 19 ஆவது திருத்தத்தைக் காக்க மக்களை அணி திரட்டுவோம்

### ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு,ஓக.27

அரசமைப்பின் 19ஆவது திருத் தச்சட்டத்தை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கியமக்கள்சக்தியின்களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு

2



## நாடாளுமன்ற மக்கள் கலரி மறு அறிவித்தல் வரை பூட்டு



கொழும்பு, ஓக 27

மீள அறிவிக்கும் வரை நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் கலரி திறக்கப்படுவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று காரண மாக, சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தலுக் கமையவே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என நாடாளுமன்றத்தின்

2

## பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு,ஓக. 27

பெண் ஒருவரிடமிருந்து பாலி யல் இலஞ்சம் கோரிய குற்றச்சாட் டில் ஹொரணை பொலிஸ் நிலை யத்தில் கடமையில் இருந்த உத விப் பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும்

2

## கோப் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்வு

கொழும்பு, ஓக 27

பொது நிறுவனங்கள் தொடர் பான நாடாளுமன்றக் குழு, அரச கணக்குக்குழு ஆகியவற்றில் அங் கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப் பினர்களின்

2

## இடைக்காலக் கணக்கறிக்கைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

### இன்று நாடாளுமன்றில் முன்வைப்பு

கொழும்பு, ஓக 27

ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி தலைமையிலான புதிய அரசால் நாடாளுமன்றத் தில் இன்று முன்வைக்கப்பட வுள்ள நான்கு மாத காலத்துக் கான இடைக்காலக் கணக் கறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இடைக்காலக் கணக்க றிக்கை தொடர்பான இரு நாள் நாடாளுமன்ற விவாதம் இன் றும், நாளையும் நடைபெற வுள்ளது. நாளை மாலை சபை யில் இடைக்காலக் கணக்கறிக் கையை நிறைவேற்றத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான புதிய வரவு - செலவுத் திட்டம் உருவாக்கப்படவுள்ளமை யால் எதிர்வரும்

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் நாளையும் நாடாளுமன்ற அமர்வு நடைபெறுகின்றது. இந்த அமர்வுகளுக்கு இடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர், பேச்சாளர், கொறடா நியமனங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. பேச்சாளர் நியமனத்தில் செல்வம் கண் வைத்திருந்தார். இன்று அல்லது நாளை நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும்போது அந்தப் பதவி தமக்குக் கிடைக்கும் என்று மனப்பாலும் அவர் குடித்திருக்கக் கூடும்.

ஆனால், இந்தக் கூட்டம் இவ்வாரம் நடைபெறாது, அடுத்த மாதத்தில்தான் இனிச் சாத்தியம் என்று இரண்டு தினங்களுக்கு முன்னரே இப்பத்தியில் நான் கூறியிருந்தேன்.

இன்றும், நாளையும் நாடாளுமன்றம் கூடும்போது நாடாளுமன்றக் கூட்டங்களில் சம்பந்தனும், சுமந்திரனும் பங்குபற்றமாட்டார்கள். அதனால் இன்றோ, நாளையோ - இந்த வார நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இடையே - கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற வாய்ப்பில்லை என்று நான் தெளிவாகவும் குறிப்பிட்டிருந்தேன்.

இது குறித்து செல்வத்திடம் ஊடகவியலாளர்கள் கேட்டிருக்கின்றனர்.

கூட்டம் இந்த வாரம் நடக்காது என்று கூற வேண்டிய அவர் 'சம்பந்தனுக்க திடீர் உடல் நலக்குறைவால் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு' என்று கூறியிருக்கின்றார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர் அப்படிக் கூறினார் என்று செய்தி வெளியாகிய அதேசமயம், திருகோணமலையில் தமது இல்லத்தில் நல்ல தேக ஆரோக்கியத்துடன், அமெரிக்கத் தூதுவருடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார் சம்பந்தன்.

*"திருகோணமலையில் இருக்கும் நான் சனியன்று வவுனியாவில் தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டும். அதற்கு இடையில் கொழும்புக்குப் பிரயாணம் செய்து மீண்டும் வவுனியா திரும்ப முடியாது. அதற்கு எனது உடல் நிலை இடம்கொடுக்காது. அதனால் இந்த வாரம் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வில் என்னால் பங்குபற்றமுடியாது. ஆகவே கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை அடுத்த மாதம் வைத்துக் கொள்ளலாம்."* - என்று சம்பந்தன் சில வேளைகளில் கூறியிருக்கக் கூடும்.

அதற்காக, 'சம்பந்தனுக்கு திடீர் உடல் நலக் குறைவு. அதனால் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு' - என்று கதையை மாற்றுவது **too much.** நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகரே....?

****

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் அதன் தலைமைக்கும் மணிவண்ணனுக்கும் இடையிலான பகைமை மேலும் வலுப்பெறுகின்றது என எனது செய்தியாளர் தெரிவிக்கின்றார். இது தொடர்பில் அவர் பொறுக்கி வந்த தகவல்கள் இவை:-

உள்ளூராட்சி சபைகளுக்கு நியமனம் பெற்ற உறுப்பினர்களில் மணிவண்ணனுக்கு ஆதரவானவர்கள் என்று கருதப்படுவோர் உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு கட்சி யால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளூராட்சி சபைகளுக்கு விகிதாசார அடிப்படையில் கிடைக்கப்பெற்ற ஆசனங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வருட காலமே பதவி வகிக்க முடியும் என்று நிபந்தனையுடனேயே அவற்றை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் நியமன உறுப்பினர்களில் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு சார்பாக செயற்படும் உறுப்பினர்களை மட்டுமே பதவி விலகுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தால் இப்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தொலைபேசி வழியாகவே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் பட்டியல் உறுப்பினர்கள் மூவர் உள்ளனர். இதில் ஒருவர் சபை ஆரம்பக் காலம் முதலும் ஏனைய இருவரும் கடந்த ஓர் ஆண்டாகவுமே சபையில் உள்ள நிலையில் ஓர் ஆண்டாக சபையில் அங்கம் வகிக்கும் இருவரை மட்டுமே பதவி விலகக் கோரப்பட்டுள்ளது.

இதேபோன்று சாவகச்சேரி நகர சபையில் நால்வர் பட்டியல் உறுப்பினராகவுள்ள நிலையில் மூவர் பதவி விலகக் கோரப்பட்டுள்ளனர். இவ்வாறு கோரப்பட்டுள்ளவர்கள் அனைவரும் மணிவண்ணனிற்காக கடந்த தேர்தலில் பணியாற்றியவர்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மணிவண்ணன்பாடு சிக்கல்தான் போலும்....!

- மின்னல் -

## அரசமைப்பின் 13, 19 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தனின் இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பு தொடர்பில் சம்பந்தன் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் என்னுடன் கலந்துரையாடினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் அடைந்த பின்னடைவுக்கான காரணங்கள் தொடர்பில் அவருக்கு நான் விளக்கங்களை அளித்தேன்.

தேர்தல் பரப்புரைகளின்போது சில தமிழ்க் கட்சிகள், தேசிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டன. அந்தக் கட்சிகள் தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களுக்குப் பண உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கின. அதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை அதிக வாக்குகள் கிடைக்கவில்லை. இதனால் கடந்த காலங்களைப் போல் போதிய ஆசனங்களைக் கூட்டமைப்பால் பெற முடியவில்லை என்பதை அமெரிக்கத் தூதுவரிடம் விளக்கிக் கூறினேன்.

அதேவேளை, புதிய அரசால் அரசமைப்பின் 13 மற்றும் 19ஆவது திருத்தங்களை நீக்குவது அல்லது அதில் மாற்றங்களை மேற்கொள்வது குறித்த எங்கள் கட்சியின் நிலைப்பாட்டை அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்தேன்.

13ஆவது மற்றும் 19ஆவது திருத்தங்களில் புதிய அரசு மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் என்னவென்பது எங்களுக்குத் தெரியாது என்பதையும் அவரிடம் குறிப்பிட்டேன்.

இந்த விடயம் குறித்து சர்வதேச சமூகம் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

இலங்கையின் நீண்டகால தேசிய பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. முன்னைய அரசு கூடதனக்குள் ஏற்பட்ட பிளவால் தீர்வை முன்வைக்கத் தவறிவிட்டது என்பதையும் தூதுவரிடம் சுட்டிக்காட்டினேன்.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, நோர்வே மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இலங்கை அரசு பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது.

இந்த நாடுகளின் ஆதரவுடன் தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கை அரசு தோற்கடித்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு முன்வைக்கப்படவில்லை என்பதையும் அமெரிக்கத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினேன் - என்றார்.

## செப்ரெம்பர் 3ஆம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதே நீதி அமைச்சர் அலி சப்ரி மேற்படித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பதற்காகவே 20 திருத்தச் சட்டவரைவு முன்வைக்கப்படவுள்ளது.

## புத்தளத்தைச் சேர்ந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் சட்டவிரோத தொழில் ஈடுபட்டவர்கள் படகுகளைக் கரையில் கைவிட்டு அங்கிருந்து தப்பித்துள்ளனர்.

நாகர்கோவில் கடற்பரப்பில் நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்டத்துக்குப் புறம்பாகப் புத்தளம் மீனவர்கள் இரகசியமாகத் தொழிலில் ஈடுபடுகின்றனர் என அண்மைக்காலமாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இவர்கள் நாகர்கோவில் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர்கள் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக் கப்பட்டது.

தொழில் ஈடுபட்ட புத்தளத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலிற்குச் சென்று கரையேறிய போது, அங்கு கூடிய உள்ளூர் மீனவர்கள் அந்தப் படகுகளை அதிகாரிகளின் உதவியுடன் தடுக்க முயன்றனர். அதன்போது படகுகளில் இருந்தவர்கள் தப்பி ஓடியபோதும் 3 படகுகளும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

படகுகளில் ஒன்றில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை ஒன்று கைப்பற்றப்பட்டது. படகுகளை நீதிமன்றில் பாரப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் எடுத்துள்ளனர்.

## ரூ. 42 கோடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுபாய்க்குத் தப்பிச்செல்ல முற்பட்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட 4 சந்தேகநபர்களில் அங்கொட லொக்காவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய இருவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களிடமிருந்து 42 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய ஹெரோயின், ரி - 56 ரகத் துப்பாக்கி, 9 எம்.எம். துப்பாக்கி, ரி - 56 ரகத் துப்பாக்கி ரவைகள் மற்றும் துப்பாக்கி ரவை கோப்புக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## 19 ஆவது ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பல தியாகங்களுக்கு மத்தியிலேயே 19 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே, அந்தச் சட்டத்தில் ஏதேனும் குறைப்பாடு இருந்தால் அதனை மாற்றியமைக்கலாம். மாறாக 19 ஐ முழுமையாக நீக்குவதற்கு இடமளிக்கமுடியாது. 19 ஐ பாதுகாப்பதற்காக மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.

தகவல் அறியும் சட்டம், சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன தொடர வேண்டும் - என்றார்.

## மைத்திரிபாலவிடம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், தனது இல்லத்திற்கு வந்து வாக்குமூலம் பெறும்படி மைத்திரி கோரியிருந்தார். அதன்படி நேற்று வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

## நாடாளுமன்ற ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கலச் சேவிதர் நரேந்திர பெனாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுமக்கள் கலரியை மீண்டும் திறப்பது தொடர்பான திகதி சுகாதாரத் துறையின் ஆலோசனையின்படி எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## பெண்ணிடம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் கிடைக்கப்பெற்ற புகாரின் அடிப்படையில் இந்த அதிகாரியை கைது செய்துள்ளது.

தனது மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தமை தொடர்பாக தனக்குத் தேவையான ஆவணத்தை வழங்குவதற்காக பெண் அந்த அதிகாரியை அணுகிய போதே அவர் பாலியல் இலஞ்சம் கோரியிருந்தார்.

மோட்டார் சைக்கிளுக்கான இழப்பீட்டை வழங்க காப்புறுதி நிறுவனம் பொலிஸ் அறிக்கையை கோரியிருந்தது.

பாலியல் இலஞ்சம் பெறுவதற்காக அந்தப் பெண்ணைச் சந்திக்க இங்கிரியவில் உள்ள நம்பபனா பகுதியில் அந்த பொலிஸ் அதிகாரி காத்திருந்தபோது, அவர் கைது செய்யப்பட்டார்.

## கோப் குழு உறுப்பினர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை இம்முறை அதிகரிக்கப்படவுள்ளது.

இவ்விரு குழுக்களிலும் ஆளுங்கட்சியின் சார்பில் 10 பேரும், எதிரணிகளின் சார்பில் அறுவருமாக மொத்தம் 16 பேர் அங்கம் வகித்தனர்.

இந்தநிலையில் ஆளுங்கட்சியின் சார்பில் மேலும் ஐவரையும், எதிரணிகளின் சார்பில் மேலும் மூவரையும் உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது மேற்படி குழுக்களுக்கான உறுப்பினர்கள் பெயரிடப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இவ்விரு குழுக்களினதும் தலைமைப்பதவி எதிரணிக்கு அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின்போது கோப் குழுவின் தலைவராக சுனில் ஹந்துன்நெத்தி செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைக்காலக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் மாதம் வரைக்கான இடைக்காலக் கணக்கறிக்கையை உருவாக்க அமைச்சரவைக் கன்னிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கை கடந்த ஒரு வார காலமாக முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எதிர்வரும் நான்கு மாத காலத்துக்குத் தேவையான இடைக்காலக் கணக்கறிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படுள்ளது.

இந்த இடைக்காலக் கணக்கறிக்கையின் முழு செலவீனம் 1,747.68 பில்லியன் ரூபா நிதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் அரச சேவைகள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்கு 194.38 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய அமைச்சுக்களைக் காட்டிலும் அரச சேவைகள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பாதுகாப்பு அமைச்சுக்கு 174.09 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மீள் செலுத்துகைக்காக 778.39 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under mentioned post from suitably qualified persons up to **11.09.2020**.

### 1. Management Assistant - ON CONTRACT (01 POST)

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at **One Sitting** with credit passes in
   i) Sinhala/ Tamil
   ii) English Language/ English Literature
   iii) Mathematics

**AND**

2. Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at **One Sitting** (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)
3. Preference will be given to those who possess the following;
   a. Fluency in English
   b. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from recognized institutes.
   c. Two years of experience in the use of computer application packages.
4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 36,900 (fixed)
- This appointment is a fulltime (contract basis) for a period of six months and it can be extended if necessary.

**HOW TO APPLY:**

Prescribed applications forms can be obtained from the Office of the **Dean, Faculty of Graduates Studies, University of Jaffna, Palaly Road, Thirunelvely, Jaffna**, and the perfected applications should be submitted to the following address **Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Palaly Road, Thirunelvely,Jaffna.**

Applicants should deposit Rs.100 at any branch of the Peoples bank in favor of **"University of Jaffna"** account no **"162-1-001-6-0000880**. Applications must accompany a copy of the bank deposit slip.

Applicants are requested to indicate the post name **"Management Assistant – Contract Basis"** in the Top Left hand corner of the envelope.

**Note:**

1. Applicants in the Service of Government, Corporations and Statutory Board can submit their application directly. When they present for the interview they should bring a hardcopy forwarded through the Head of Institution concerned.
2. Applications without the copies of the O/L and A/L certificates, incomplete applications and applications which are late or that do not accompany the bank slip will not be considered for further processing.

**REGISTRAR**
**26.08.2020**


புதிய அரசமைப்பு என்ற பெயரில்

# 13 ,14,16,17, 19 திருத்தங்களுக்கு முடிவுகட்ட அரசு கடும் முயற்சி

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. போட்டுடைப்பு

கொழும்பு, ஓக 27

20 ஆவது அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டு 13 ,14,16,17 மற்றும் 19 ஆகிய அரசமைப்பு திருத்தங்களை இல்லா தொழிக்கவே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு முயற்சித்து வருகின்றது.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டினார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அமெரிக்கப் பிரஜையான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கே அரசு விரைவில் அரசமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகின்றது. அமெரிக்காவின் பிரஜையாக ஒருவர் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் அவர் அமெரிக்காவுக்காக ஆயுதம் ஏந்தவும் தயாராக இருக்கின்றார் என்று உறுதிமொழி வழங்குகின்றார். பஸில் ராஜபக்சவும் இவ்வாறு உறுதிமொழி வழங்கியே அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த நிலையில், இவ்வாறான உறுதிமொழி வழங்கிய ஒருவர் வேறொரு நாட்டின் ஆட்சிப் பொறுப்புகளில் ஈடுபடுவது நியாயமானதா?

அவர் இந்தப் பிரஜாவுரிமையை விட்டுக் கொடுக்கவும் விரும்பமின்றியே இருக்கின்றார். இது தொடர்பில் எமக்கு சிக்கல் இல்லை. ஆனால், இவ்வாறான ஒரு நபருக்கு நாடாளுமன்ற உறுப்புரிமையோ, அமைச்சு நியமனம் அல்லது பிரதமர் பதவியோ பெற்றுக்கொடுக்கப்பட்டால் அதன் மீது நம்பிக்கை கொள்ள முடியுமா?

ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் வடக்கில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள் தமிழ் மொழியில் இடம்பெறுகின்றன எனவும், அவற்றை சிங்கள மொழியிலேயே மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

புதிய அரசமைப்பு என்னும் போர்வையில் அரசு 13, 14, 16, 17, 19 ஆகிய அரசமைப்பு திருத்தங்களை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றது போன்றே தோன்றுகின்றது. அதனாலேயே ஆளும் தரப்பினர் இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நாட்டைப் பொறுத்தமட்டில் மொழிப் பிரச்சினையே பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தநிலையில், தொடர்ந்தும் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினையைத் தோற்றுவிப்பது தவறான செயற்பாடாகும்.

சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் சிங்கள மொழியில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுவதைப் போன்று தமிழ் மக்களுக்கும் அந்த உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இவற்றை நீக்க முயற்சிப்பதால் மேலும் நெருக்கடிகள் அதிகரிக்குமே தவிர மாற்றங்கள் எதுவும் ஏற்படாது – என்றார்.

# மேலும் இருவருக்கு கொரோனா தொற்று!

நாட்டில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை இரண்டாயிரத்து 984 ஆக அதிகரித்துள்ளது.

தொற்று உறுதிசெய்யப்பட்ட இருவரும் மாலைதீவில் இருந்து நாடு திரும்பியவர்கள் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 819 ஆக அதிரித்துள்ள நிலையில் மேலும் 153 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ்த் தேசியம் பேணுவோம்!

தமிழ்த் தேசிய உணர்வெழுச்சிக்கு முடிவு காலம் வந்துவிட்டதா? அது அஸ்தமிக்கத் தொடங்கி விட்டதா? - என்ற கேள்விக்கு கணைகள் இப்போது கிளம்பத் தொடங்கியிருக்கின்றன.

*“இனவாதத்தை வடக்கு மக்கள் நிராகரித்துள்ளார்கள். இனவாதம் பேசும் விக்னேஸ்வரனுக்கு விழுந்த விருப்பு வாக்குகள் ஆக 21 ஆயிரத்து 554 மட்டுமே. தமது அரசியல் பிழைப்புக்காக அவர் இன்று இனவாதத்தைக் கையில் எடுத்திருக்கின்றார். எனினும் இனவாத அரசியலைக் கைவிட்டுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான அங்கஜன் இராமநாதனுக்கு 36 ஆயிரத்து 365 விருப்பு வாக்குகளும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு 32 ஆயிரத்து 146 வாக்குகளும் வடக்கில் இருந்து கிடைத்துள்ளன. இதன்மூலம் வடக்கு மக்கள் இனவாதத்தை விரும்பவில்லை எனும் சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் இனவாதிகளுடன் இணைந்து பயணிக்கத் தயாராக இல்லை. மாறாகத் தெற்குடன் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றனர்.”* இவ்வாறு அமைச்சர் உதய கம்பன்பில்ல தெரிவித்திருக்கின்றார்.

முழு பௌத்த, சிங்களப் பேரினவாதி ஒருவர் தமிழ்த் தலைவர்களைப் பார்த்து ‘இனவாதிகள்’ என்றும் விமர்சிக்கும் அவல நிலைமை இங்கு.

அவர் ‘இனவாதம்’ என்று இங்கு விமர்சிப்பது தமிழ்த் தேசியச் சிந்தனைப் போக்கைத்தான். அதனை அடியோடு மறந்து, துறந்து ஸ்ரீலங்கா தேசியத்துடன் அல்லது சிங்கள, பௌத்த பேரினவாதத் தேசியத்துடன் கரைந்து - சங்கமித்து - தங்கள் இனத்துவத் தனித்துவத்தையும் சிறப்புகளையும் தொலைத்து விடுவதைத் தமிழர்கள் விரும்புவதையே ‘தென்னிலங்கையுடன் ஒன்றிணைந்து பயணிக்க விரும்பும்’ விவகாரமாக அவர் அர்த்தம் பண்ணிக் கூறுகின்றார் என்பது தெளிவானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் இருந்த பதினாறு எம்.பிக்கள் என்ற எண்ணிக்கை இப்போது பத்தாக குறைந்து விட்டது. தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அங்கஜன், டக்ளஸ் தேவானந்தா, கு.திலீபன், வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) போன்ற எம்.பிக்கள் ஆளும் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாகத் தெரிவாகியுள்ளனர். ஆகவே தனித் தமிழ்த் தேசியம் என்ற சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்கள் நாட்டின் ஒட்டுமொத்தத் தேசியத்துக்குள் கரைவதற்குத் தயாராகி விட்டார்கள் என்ற சாரப்பட ஆளும் தரப்பினால் எகத்தாளமாகக் கூறப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவில் தொடங்கி விமல் வீரவன்ஸ், உதய கம்மன்பில்ல, நாமல் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் என்று பொதுஜன பெரமுன ஆட்சிப் பீடமே கொண்டாட்டத்துடன் இச்செய்தியை மேடைகள் தோறும் முழங்கி வருகின்றது.

ஆனால், தமிழ்த் தரப்பில் மெல்லிய முனகலுடன் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

“தமிழ்த் தேசியம் முடிந்து விட்டதா? அது, இட்டுக் கட்டிய கதை!” என்ற சாரப்பட கருத்துக் கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம்.

*“யாழ் மாவட்டத்தில் கடந்தமுறை தமிழ்த் தேசியம் பேசிய தமிழ்க் கூட்டமைப்புக்கு ஐந்து இடங்கள் கிடைத்தன. இந்தத் தடவை அது மூன்றாகக் குறைந்து விட்டது என்பது உண்மைதான். ஆனால் அந்த இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்பவர்கள் தான். ஆகவே யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியம் பின்னடைவைக் கண்டு விட்டது என்று கூறமுடியாது. ஒரு சின்ன சறுக்கல் உண்டு. அவ்வளவுதான்.”* - என்று விளக்கம் கூறியிருக்கின்றார் சிவஞானம்.

அவர் கூறிய கருத்து சரியானது என்றால், அதே அடிப்படையில் நோக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தடவை பதினாறு இடங்களைப் பெற்றது, இந்த முறை தமிழ்த் தேசியம் பேசும் சக்திகள் பதின்மூன்று இடங்களைப் பெற்றுள்ளன. ஆகவே பெரிய பின்னடைவு இல்லை என்று தமிழர் தரப்பு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம்.

இதுபோலவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி போன்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கின்ற தரப்புகளுக்கு இம்முறை விழுந்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்து, ஆகவே 'தமிழத் தேசியம்' வலியுறுத்தும் தரப்புகள் துவண்டு விடவில்லை. தமிழத் தேசியத்துக்கான ஆதரவு நிலைமை இன்னும் உள்ளது என்று தமிழர்கள் நம்பிக்கை கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

ஆனால், நிச்சயமாக அப்படி நம்பிக்கையுடன் கருதக் கூடிய ஆரோக்கிய நிலைமை - களப்புறச் சூழல் - யதார்த்தத்தில் இல்லை என்பதுதான் வேதனை தரும் உண்மையாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த, சிங்கள பேரினவாதம் பேசிய தரப்புகளுக்கு நெற்றிப் பொட்டில் அடித்தமை போல ஒன்று திரண்டு சூடு கொடுத்தார்கள் தமிழ் மக்கள்.

அந்த மக்களை - வாக்காளர்களை - தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் தொடர்ந்து தக்க வைப்பதில் தமிழ்த் தலைமைகள் தவறிழைத்து, கோட்டை விட்டுவிட்டு நிற்கின்றன என்ற யதார்த்தப் புறவுண்மையை தமிழ்த் தலைமைகள் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

இந்தப் பின்னடைவைச் சீர்திருத்தும் மார்க்கத்தைத் தமிழ்த் தேசிய சக்திகள் கண்டுபிடித்து, அதன் வழி பயணிக்காவிடில், இன்னும் சில வருடங்களில் ‘தமிழ்த் தேசியம்’ என்பது இலங்கைத் தீவில் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய - தொலைந்த - பொருளாகிவிடும்.

# துணைப் பிரதமர் பதவி என்று ஒன்று இல்லை அது ஊடகங்களால் புனையப்பட்ட கட்டுக்கதை!

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, ஓக.27

துணை பிரதமர் பதவி தொடர்பாக ஊடகங்களில் வெளியாகும் வதந்திகளை மறுப்பதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர்–

துணைப் பிரதமர் என்ற தலைப்பு ஊடகங்களால் புனையப்பட்ட ஒன்று என்றும் தற்போதைய அரசாங்கத்தில் அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்றும் உறுதியளிப்பதாகக் கூறினார்.

ஊடகங்கள் வதந்திகளை பரப்பிவிட்டு பின்னர் அவற்றினை உண்மை அறிக்கைகளாக மாற்றி, தங்களை கேள்வி கேட்க முடிவு செய்கின்றன என்றும் குற்றம்சாட்டினார்.



மேலும் தாங்கள் தற்போது அரசமைப்பு திருத்தங்கள் தொடர்பாகவே அவதானம் செலுத்தி வருகிறோம் எனவும் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டும் என்றும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே.கவுடன் இணைந்து பணியாற்ற சஜித் தரப்பால் இரு நிபந்தனைகள்

இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பணியாற்ற கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனைகள் ஏதும் இல்லாமல் சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைக்கப்படுவதே ஒரு நிபந்தனை எனக் கூறினார்.

மேலும் மாறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் அனைவரையும் ஓரணியில் ஒன்றிணைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு புதிய தலைவர் நியமிக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியை இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது மற்ற நிபந்தனை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்க அதிக காலம் தேவைப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்கள் அனுப்பிய செய்தியைப் புரிந்துகொண்டு பிரசாரத்தை வலுப்படுத்த ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கேட்டுக்கொண்டார்.

இதேவேளை பொதுத்தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த குற்றச்சாட்டில் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட சுமார் 60 பேர் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது, இது ஒரு பாரிய குறைபாடு என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்டது என்றும் அதன் அடிப்படையிலேயே அடிமட்ட அரசியல்வாதிகள் இவ்வாறு செயற்பட்டனர் எனவும் கூறினார்.

# அரச அச்சு நடவடிக்கைகள் அனைத்தையும் இனி அரச அச்சகத்தில் மேற்கொள்ளத் திட்டம்

கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அச்சு நடவடிக்கைகளும் அரச அச்சக திணைக்களத்தின் மூலம் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை வகுக்குமாறு வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கு அமைவாக ஆரம்ப நடவடிக்கை என்ற ரீதியில் கடவுச்சீட்டை அச்சிடுவதற்கு தேவையான வேலைத்திட்டத்தை வகுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

அரச அச்சக திணைக்களத்தின் செயற்பாடுகளின் மதிப்பீடு தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுகளின் போதே அமைச்சர் இத னைக் குறிப்பிட்டார்.

தற்பொழுது முத்திரை, வாக்காளர் அட்டை விசாவிற்கான ஸ்ரிக்கர் மற்றும் வர்தமானி அறிவிப்பு ஆகியன அரசாங்க அச்சக திணைக்களத்தில் அச்சிடப்படுகின்றன.

அமைச்சு, நிறுவனங்கள் திணைக்களங்கள் போன்றவற்றின் அச்சு நடவடிக்கைகளில் 50 சதவீதம் அல்லது முடிந்தளவு பாதுகாப்பான அச்சு நடவடிக்கைகளை அரசாங்க அச்சக திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்க அச்சக திணைக்களத்திற்கு அரசாங்க நிறுவனங்களின் மூலம் அறவிடப்படவேண்டிய மிகுதி 50 கோடி ரூபாவிற்கு மேற்பட்டதாகும் என்று இந்தக் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

# தொழிலாளர்களுக்குப் பாதிப்பான சட்டங்கள் மறுசீரமைக்க ஏற்பாடு!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

நீண்டகாலமாக தொழிலாளர்களுக்கு பாதிப்பாக உள்ள சட்டங்கள் பலவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



தொழில் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு தொழில்புரியும் பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பல தடைகள் காணப்படுகின்றன. அவற்றை நீக்குவதற்காக வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ஆதிக்குடிகளான தமிழர்கள் தனியான ஒரு தேசம் என்பது பேரினவாதிகளின் கூச்சல்களால் இல்லை என்றாகிவிடாது

## பொ.ஐங்கரநேசன் ஆதாரங்களுடன் உறுதிபடத் தெரிவிப்பு

புதிய நாடாளுமன்றின் கன்னி அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஆற்றிய உரைகள் தொடர்பாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் கடுமையான கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்கள் நாடாளுமன்றில் பேசத் தகாத வார்த்தைகள் எதனையும் பேசவில்லை. இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஆதிக்குடிகள் என்பதையும், தனியானதொரு தேசம் என்பதையுமே வலியுறுத்தியிருந்தார்கள். இதற்கே, தென்னிலங்கை அரசியல்வாதிகள் கொதித்துப்போயுள்ளார்கள். இலங்கைத் தீவில் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதும் அவர்கள் தனியானதொரு தேசம் என்பதும் வரலாற்று உண்மைகள். இவை பேரினவாதிகளின் கூச்சல்களால் ஒருபோதும் இல்லை என்றாகிவிடாது. – என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரின் உரைகள் தொடர்பாக பெரும்பான்மையின நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனங்களைத் தெரிவித்துவரும் நிலையில், இது தொடர்பாகப் பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்குறிப்பிட்டுள்ளவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், அவரது அறிக்கையில் –

சிங்கள இலக்கியங்களும், பாளி இலக்கியங்களும் இலங்கையின் பூர்வீக மக்கள் சிங்கள மொழி பேசுகின்ற ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் வட இந்தியாவில் இருந்து வந்த ஆரிய இன மக்கள் என்றும் கூறுகின்றன. ஆனால், இவற்றுக்கு ஆதாரமாக எவ்விதத் தொல்லியல் சான்றுகளும், இலங்கையில் இருந்து கிடைக்கவில்லை. இலங்கையின் பூர்வீக மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த, பெருங்கற் பண்பாட்டுக்குரிய மக்கள் இனம் என்பது வரலாற்றாசிரியர்களாலும், தொல்லியலாளர்களாலும், மொழியியலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தென்னிந்தியாவின் நிலப்பரப்பில் இருந்து இயற்கைப் பேரிடர் காரணமாகப் பிரிந்த ஒரு நிலப்பரப்பே இலங்கைத் தீவு என்று புவியியலாளர்கள் நிரூபித்திருக்கும் நிலையில், இலங்கையின் பூர்வீக மக்கள் தமிழ் மொழி பேசுகின்ற திராவிடப் பண்பாட்டு மக்கள் என்பதை வரலாற்று அறிவில்லாத சாதாரண மக்களே ஏற்றுக்கொள்வார்கள்.

இலங்கைத் தீவில் சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் தங்களது ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தவர்கள் என்றவகையிலும், பாரம்பரியத் தாயகமாகக் கொள்ளக்கூடிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளவர்கள் என்றவகையிலும், தங்களுக்கிடையே மொழி ரீதியான, சமய ரீதியான, பண்பாட்டு ரீதியான சார்பு நிலையைக் கொண்டுள்ளவர்கள் என்ற வகையிலும் தனியானதொரு தேசமாகவே உள்ளார்கள். இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் தமிழர் தேசத்தை அங்கீகரித்த நிலையில், இவர்களின் பின்வந்த ஆங்கிலேயர்களே இரண்டு தேசங்களையும் வலுக்கட்டாயமாக ஒன்றாக்கி, ஒற்றையாட்சி முறைமையைத் திணித்துவிட்டுச் சென்றனர்.

பூமி தட்டையானது. பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்ற கோட்பாடு நிலைபெற்றிருந்த காலப்பகுதியில், கலிலியோ கலிலி அதனை நிராகரித்து பூமி கோளமானது என்றும், பூமியும் ஏனைய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்றும் வலியுறுத்தியபோது அவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத அதிகார வர்க்கம் அவரைச் சாகும்வரை வீட்டுக்காவலில் வைத்திருந்தது. எவ்வாறு, அதிகார வர்க்கம் கலிலியோ கலிலியை வீட்டுக்காவலில் வைத்து உண்மையை மறைக்க முற்பட்டாலும் பூமி கோளவடிவானது இல்லை என்றாகாதோ, அதேபோன்றே இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் எத்தகைய கொடும் நெருக்கடிகளைக் கொடுத்தாலும் தமிழர்களே தொன்மைக் குடிகள் என்பதும், தமிழர்கள் தனியானதொரு தேசம் என்பதும் ஒருபோதுமே இல்லை என்றாகிவிடாது. – என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 30 ஆம் திகதி வடமாகாணம் தழுவிய போராட்டம் ஏற்பாடு!

## அனைவரையும் அழைக்கின்றரார்கள் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

மட்டக் களப்பு, ஓக.27

எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் போராட்ட மொன்று முன்னெடுனக்கப்படவுள்ளது.

இந்த போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி திருமதி அமலநாயகி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த பேரணி தொடர்பாக ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

எம்மால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேர ணியில் அனைவரும் கலந்துகொண்டு காணா மலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஒத்து ழைப்பு வழங்கவும்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாக தற்போதைய அரசு எவ்விதமான கரிசனையும் கொள்ளாது என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அதனால், எமக்கான தீர்வை சர்வதேசம் தலையீடு செய்து பெற்றுத் தருவதனை வலியுறுத்தும் முகமாக இப்பேரணியில் ஒன்றி ணைந்து குரல்கொடுக்க வருமாறு அனை வரையும் தயவுடன் அழைக்கின்றோம். – என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஏம்.சி.சி. உடன்படிக்கை பற்றி ஆராயும் புதிய அமைச்சரவை!

மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் கருத்து தெரிவித்துள்ள அவர், அந்தக் குழு தேசிய நலன்களைப் பற்றி பல கவலைகளை எழுப்பிய நிலை யில் அவை குறித்து பதில்களைத் தேட வேண்டும் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அறிக்கை புதிய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நான் நினைக்கின்றேன். புதிய அமைச்சரவை ஒவ்வோர் அமைச்சாலும் அந்த அறிக்கை அவதானிக்கப்படும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இவை அனைத்தும் முடிந்ததும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு விடப்படும் எனத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் வளர்ச்சி தொடர்பாக இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்குக்கிடையில் கையெழுத்திடப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்து தெரிவித்திருந்த அவர், இது இரு நாடுகளுக்கும் இடையிலான ஓர் ஏற்பாடு என்பதால் ஜனாதிபதி அதை மதிக்க உறுதிபூண்டிருந்தார்.

ஜனாதிபதியின் கொள்கை என்னவென்றால், எந்தவொரு நாட்டிற்கும் எந்தவொரு தேசிய சொத்தும் முழு கட்டுப்பாட்டில் வழங்கப்பட மாட்டாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பசறையில் 4 பேர் கைது

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பதுளை – செங்கலடி வீதியின் 13 ஆம் கட்டை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் பசறை பொலிஸ் நிலையத்தின் உதவி பொலிஸ் அதிகாரி அஞ்சுல இஷார குமார தலைமையிலான குழுவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸாருக்கு கிடைத்துள்ள இரகசிய தகவலொன்றை அடிப்படையாக வைத்து சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போதே மேற்படி சந்தேக நபர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை பதுளை மஜிஸ்ட்ரேட் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

# சிவகுமாரனின் பிறந்த தினம் நேற்று நினைவு கூரப்பட்டது

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.27

தமிழ் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் முதல் தற்கொடையாளி பொன்.சிவகுமாரனின் 70ஆவது ஜனனதினம் நேற்று நினைவு கூரப்பட்டது.

உரும்பிராயில் அமைந்துள்ள பொன். சிவகுமரனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கட்சி பிரமுகர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் தோல்விக்கு பின் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் எதிர்கால செல்வழி

- டி.பி.எஸ்.ஜெயராஜ் -

ஆங்கில மூலம் : டெய்லி மிரர்
தமிழ் மொழி பெயர்ப்பு :வீ. தனபாலசிங்கம்
நன்றி :வீரகேசரி

அண்மையில் முடிவடைந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல மூத்த அரசியல்வாதிகள் தோல்வி கண்டிருக்கிறார்கள். அவர்களில் நன்கு பிரபலமான வடபகுதி தமிழ்த் தலைவர் சோமசுந்தரம் மாவை சேனாதிராஜாவும் ஒருவர். அவர் 2000ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 20வருடங்கள் நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து வந்தார். வழமையாக நீண்ட கால அனுபவம் கொண்ட அரசியல் தலைவர் ஒருவர் தேர்தலில் தோல்வி கண்டபிறகு அரசியல் அமளி ஏற்படுகிறது. மாவை சேனாதிராஜாவை பொறுத்தவரையில், தேர்தலை அவர் எதிர்கொண்ட விதமும் தேர்தல் தோல்விக்கு பிறகு அவர் பிரதிபலிப்புகளை வெளிக்காட்டுகின்ற விதமும் அவர் தோல்வியை ஒரு பண்பு நயத்துடன் ஏற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. முற்றிலும் அதிருப்தியடைந்திருக்கும் சேனாதிராஜா சுயநல சக்திகளினால் தூண்டப்பட்டு மேற்கொள்ளக்கூடிய எதிர்கால நடவடிக்கைகள் நீண்டகால நோக்கில் தமிழரசுக் கட்சிக்கு பாதகமாக போய்விடலாம் என்று கட்சியின் நலன்விரும்பிகள் பலர் அஞ்சுகிறார்கள்.

மாவை சேனாதிராஜா இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்றார். மூன்று அரசியல் கட்சிகளின் கூட்டணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியாக தமிழரசுக் கட்சி விளங்குகிறது. தமிழீழ விடுதலை இயக்கமும்(ரெலோ), தமிழீழ மக் கள் விடுதலை கழகமும்(புளொட்) கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளாகும். தமிழரசுக் கட் சியின் வீட்டுச் சின்னத்தின் கீழ் தேர்தல்களில் போட்டி யிடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தலைவராகவும் சேனாதிராஜா இருக்கின்றார். அவர் முதலில் 5வருடங்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் 20வருடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து வந்தார். உயர்ந்த தோற்றம் கொண்ட சேனாதிராஜா, 1942ஆம் ஆண்டில் பிறந்தவர். எதிர்வரும் ஒக்டோபர் 27 அவர் தனது 78ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவார்.

இளமைத் துடிப்புடைய அரசியல் கிளர்ச்சியாளர்கள் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவர்களாக மாறிய நிகழ்வுகள் வரலாற்றில் நிறைந்து கிடக்கின்றன. கொந்தளிப்பான ஆர்ப்பாட்டங்களிலும் அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்ற கிளர்ச்சி உணர்வுகொண்ட இளைஞர்கள் அவர்களின் வாழ்நாளின் பிற்பகுதியில் சமநிலை உறுதியுடையவர்களாகவும் அரசியல் கட்டுமானத்தின் பாரம்பரிய தூண்களாகவும் படிமுறை வளர்ச்சி காண்கிறார்கள். இலங்கை அதன் இனப்பிளவின் இருமருங்கிலும் அத்தகைய பல உதாரணங்களை கொண் டிருக்கிறது. சேனாதிராஜா கடந்த காலத்தில் ஒரு அரசியல் கைதியாக 8வெவ்வேறு சிறைச்சாலைகளில் தனது வாழ்வின் 7வருடங்களைக் கழித்த ஓர் இலங்கை தமிழ் அரசியல்வாதி. முன்னாள் அரசியல் கிளர்ச்சிவாதியான அவர் இன்று இலங்கை தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியின் மதிப்புக்குரிய தலைவராக இருக்கிறார்.

சேனாதிராஜா வலிகாமம் வடக்கு பிரதேச சபை அல்லது தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ்வருகின்ற மாவிட்டபுரம் கிராமத்தில் பிறந்தவர். முன்னைய தொகுதி அடிப்படையிலான தேர்தல் முறையின் கீழ் மாவிட்டபுரம் காங்கேசன்துறை தொகுதிக்குள் அமைந்திருந்தது. மாவிட்டபுரத்தின் மிகவும் பிரபலமான அடையாளம் வரலாற்று பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும்.

### மாவிட்டபுரம்/ மாவை

ஒப்பீட்டளவில் நீண்ட பெயர்களை கொண்ட இடங்களின் தமிழ்ப் பெயர்களை சுருக்கி பொதுப்பாவனையில் பயன்படுத்துகின்ற போக்கொன்று தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் கோவை என்று அழைக்கப்படுகிறது. தஞ்சாவூர் தஞ்சை என்றும் திருநெல்வேலி நெல்லை என்றும் அழைக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் கரவெட்டி, நீர்வேலி மற்றும் ஊர்காவற்துறை ஆகிய ஊர்கள் முறையே கரவை, நீர்வை, காவலூர் என்று அழைக்கப்படுகின்றன. அதே போன்று மாவிட்டபுரம் சுருக்கமாக மாவை என்று அழைக்கப்படுகிறது. மாவிட்டபுரத்தை சேர்ந்தவர் என்பதால் சேனாதிராஜா தனது பெயருடன் முன்னிணைப்பாக மாவை என்ற சொல்லை சேர்த்துக் கொண்டார். அந்த கிராமத்தின் கந்தசுசாமி கடவுள் மாவை கந்தன் என்று அழைக்கப்படுவதை போன்று மாவை சேனாதிராஜாவும் மாவிட்டபுரத்தின் மிகவும் பிரபலமான பிரதிநிதியாகவும் விளங்குகிறார். பலர் அவரை எளிதாக சேனாதி, மாவை அல்லது மாவை அண்ணன் என்று அழைக்கிறார்கள்.

மாவை சேனாதிராஜாவை 40வருடங்களுக்கும் அதிகமாக நான் அறிவேன். கடந்த நூற்றாண்டில் 70களின் முற்பகுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பொது தராதர உயர்தர வகுப்பு மாணவனாக முதன்முதலாக அவருடன் பழக்கம் ஏற்பட்டது. அப்போது அவருடன் நான் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. சிறிமா பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்க காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பெருமளவு அமைதியின்மை ஏற்பட்ட நாள்கள் அவை. ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள், கறுப்புகொடிப் போராட்டங்கள், உண்ணா விரதங்கள் என்று அந்தக் காலத்தில் பெருவாரியான அரசியல் போராட்டங்கள் நடைபெற்றன. அந்த போராட்டங்களில் முன்னணியிலிருந்து செயற்படும் இளைஞராக மாவை சேனாதிராஜா இருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரணை எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டிருந்த 42 இளைஞர்







அணித் தலைவர்களில் சேனாதிராஜாவும் ஒருவர். வண்ணை ஆனந்தன் என்ற நமசிவாயம் ஆனந்த விநாயகம், காத்தமுத்து சிவானந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா என்ற சோமசுந்தரம் சேனாதிராஜா ஆகிய மூவரும் அரசியல் கைதியாக பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மூவரும் அந்த நாட்களில் தமிழ் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ‘தமிழ் அரசியல் நாயகர்களாக’ விளங்கினர்.

### மண்டூர் மகேந்திரன்

அடுத்து வந்த வருடங்களில் நான் ஒரு பத்திரிகையாளராக வந்ததும் தமிழ் அரசியலில் பிரகாசிக்க தொடங்கியிருக்கும் ஒரு நட்சத்திரமாக இருந்த மாவை சேனாதிராஜாவை தனிப்பட்ட முறையிலும் தொழில்சார் அந்தஸ்திலும் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இவ்வருடம் காலமான எனது நெருங்கிய நண்பரும் முன்னாள் அரசியல் செயற்பாட்டாளருமான மண்டூர் மகேந்திரனே 1977ஆம் ஆண்டில் இளம் நிருபராக நான் வீரகேசரியில் இணைந்தபோது கொழும்பில் வைத்து மாவை சேனாதிராஜாவுக்கு முதன்முதலில் என்னை அறிமுகம் செய்துவைத்தார். அதற்கு பிறகு யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, மட்டக்களப்பு, சென்னை, டொரன்டோ போன்ற வேறுபட்ட இடங்களில் வேறுபட்ட நேரங்களில் அவரைச் சந்தித்திருக்கிறேன். ஒரு தமிழ் அரசியல் தலைவராக சேனாதிராஜா படிமுறை வளர்ச்சி கண்டதை நான் பல வருடங்களாக அவதானித்திருக்கிறேன். தவிரவும் சேனாதிராஜாவை போன்று எனது மனைவியும் மாவிட்டபுரத்தை சேர்ந்தவரே. அதனால் இத்தகைய பின்புலத்திலேயே 2020 நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு மாவையை பற்றியும் அவரது எதிர் கால பாதையை பற்றியும் நான் எழுதுகிறேன்.

2020 நாடாளுமன்றத் தேர்தலின்போது பொதுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியும் உள்கட்சி பூசல்களினால் பாதிக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவிய உள்முரண்பாடு கூடுதல் விருப்பு வாக்குகளை பெறுவதற்கு ஒரே கட்சியின் பட்டியலில் இருக்கின்ற வேட்பாளர்களுக்கிடையிலான போட்டாபோட்டியின் பின்புலத்திலேயே தோன்றியது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களைத்தெரிவு செய்கின்றது. 2015 பொதுத்தேர்தலில் கூட்டமைப்பிலிருந்து 5பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிலிருந்து (ஈ.பி.டி.பி) ஓர் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஓர் உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

2018 உள்ளூராட்சித் தேர்தல்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாக்குகளையும் 2015 நாடாளுமன்றத் தேர்தலில் அதற்கு கிடைத்த வாக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது காணப்பட்ட வீழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், 2020 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்கு 4ஆசனங்கள் மாத்திரமே யாழ்ப்பாண மாவட்டத்தில் கிடைக்கலாம் என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர். இந்த எதிர்வு கூறல் சரியானதென்று நிரூபிக்கப்பட்டிருந்தால் 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 5எம்.பி.க்களில் ஒருவர் மீண்டும் தெரிவுசெய்யப்படாமல் போயிருப்பார். 2015 தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5கூட்டமைப்பு எம்.பி.க்கள் விருப்பு வாக்குகளின் ஒழுங்கில் எஸ்.சிறிதரன், எஸ்.சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன், இ.சரவணபவன் ஆகியோரே ஆவர். இவர்களில் சித்தார்த்தன் புளொட்டை சேர்ந்தவராக இருந்த அதேவேளை ஏனைய 4பேரும் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்கள்.

தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடையத் தொடங்கியதும் தமிழரசுக் கட்சியை சேர்ந்த 4யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு முகாம்களாக பிளவுபட்டனர். ஒருபுறம் தமிழரசுக்கட்சியின் செயலாளர் சேனாதிராஜாவும் பத்திரிகை நிறுவன உரிமையாளர் சரவணபவனும். மறுபுறம் சிறிதரனும் சுமந்திரனும் அணிசேர்ந்து கொண்டனர். இருவரும் ஒரே கட்சியை சேர்ந்தபோதிலும் சரவணபவனின் பத்திரிகைகள் சுமந்திரனுக்கு எதிராக விஷமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சிக்குள் உள்ள பிரகிருதிகளினால் சுமந்திரன் விமர்சிக்கப்பட்டபோது அவரைப் பாதுகாத்து அவரின் எதிராளிகளை கண்டித்த கூட்டமைப்பின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனேயாவார்.

(7 ஆம் பக்கம் பார்க்க..)

# தேர்தல் தோல்விக்கு பின்...

அதற்கு பிறகு சரவணபவனுக்கு சொந்தமான பத்திரிகைகளினால் சிறிதரனும் தாக்குதலுக்குள்ளாகினார்.

### சரவணபவனின் ஊடகங்கள்

சுமந்திரனும் சிறிதரனும் முறையிட்டபோது கட்சித் தலைவரான மாவை சேனாதிராஜா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவை சேனாதிராஜாவும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே போட்டியிட்டார். அவரை சரவணபவனின் பத்திரிகைகள் ஆதரித்தன. இருவருக்குமிடையே ஒரு கூட்டு ஏற்பட்டது. மறுபுறத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் சுமந்திரனும் சிறிதரனும் கூட்டாக பிரசாரங்களில் ஈடுபட்டனர். முன்னுரிமை வாக்குகளுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்கட்சி போட்டாபோட்டி பிரதானமாக சுமந்திரன் – சிறிதரன் எதிர் சேனாதிராஜா – சரவணபவன் என்ற இரு இரட்டையர் அணிகளுக்கிடையிலானதா கவே இருந்தது.

முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் 7ஆசனங்களில் 3ஆசனங்களை பெற்றுக் கொண்டது. சிவஞானம் சிறிதரன் (35,884), மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்(27,834) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன்(23,840) ஆகியோரே விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள். திருமதி சசிகலா ரவிராஜ் (23,098) வாக்குகளை பெற்று நான்காவதாக வந்தார். சரவணபவனும் (20,392) சேனாதிராஜாவும் (20,388) ஐந்தாவதாகவும் ஆறாவதாகவும் வந்தார்கள். பிறகு ஊடகவியலாளர்களுடன் பேசிய சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் தான் மூன்று தொகுதிகளில் முதலாவதாகவும் ஐந்து தொகுதிகளில் இரண்டாவதாகவும் மூன்று தொகுதிகளில் மூன்றாவதாகவும் வந்ததாக அறிவித்தார்.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், சுமந்திரனும் சிறிதரனும் வெற்றிப் பெற்ற அதேவேளை, சேனாதிராஜாவும் சரவணபவனும் தோல்வி கண்டதாகும். எவ்வாறெனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரிய பின்னடைவு ஏற்பட்டது. 2015 பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது இத்தடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் மூன்றில் ஒரு பங்குக்கும் கூடுதலாக குறைவடைந்திருந்தன. 2015இல் கூட்டமைப்பு பெற்ற 515,963(4.62சதவீதம்) வாக்குகளிலிருந்து இப்போது 327,168(2.82சதவீதம்) வாக்குகளாக வீழ்ச்சி கண்டது. கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 16இலிருந்து 10ஆக குறைந்தன. இவர்களில் 9பேர் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை, ஒருவர்தேசியப்பட்டியல்ஆசனத்துக்காகநியமிக்கப்பட்டவராவார். வடக்கில் கூட்டமைப்புக்கு 6ஆசனங்களும் கிழக்கில்

3ஆசனங்களும் கிடைத்தன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் வன்னி மாவட்டத்திலும் முறையே மூன்று எம்.பி.க்களாக 6எம்.பி.க்கள் தெரிவாகினர். மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டமைப்புக்கு இரு ஆசனங்களும் திருகோணமலையில் ஒரு ஆசனமும் கிடைத்தது. அம்பாறையில் / திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஒரு தமிழ் எம்.பி.யும் தெரிவு செய்யப்படவில்லை. கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த எம்.பி.க்களில் 7எம்.பி.க்கள் தோல்வி கண்டனர். அவர்களில் முக்கியமானவர்களில் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராஜாவும் ஒருவர்.

சிறிதரனும் சுமந்திரனும் தோல்விகண்ட தமிழரசுக் கட்சியின் தலைவரை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். அவர்கள் மாவிட்டபுரத்தில் இருக்கும் அவரது இல்லத்துக்கு தங்களது வாகனங்களில் சென்றனர். சேனாதிராஜாவுக்கு தங்களது கவலையை தெரிவித்த இருவரும் சரவணபவனுடனான கூட்டின் விளைவாகவே அவர் தோல்வியடைய வேண்டி வந்தது என்பதையும் அவர்கள் சொல்லி வைத்தனர். சுமந்திரனைத் தோற்கடிக்குமாறு சரவணபவனின் பத்திரிகைகள் வெளிப்படையாகவே மக்களை கேட்டபோது கட்சியின் தலைவர் அதை தடுக்கவில்லை என்று இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறை கூறினர். மேலும், சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தும் பெருந்தொகையான பிரசுரங்கள் அச்சிடப்பட்டுசரவணபவனின்கையாள்கள்என்றுசந்தேகிக்கப்பட்டவர்களினால் பரவலாக விநியோ கிக்கப்பட்டது. செல்வாக்கு மிக்க தமிழ்க் கட்சியின் வேட்பாளர் ஒருவர் தனது சக வேட்பாளர்களுக்கு எதிராக வேலை செய்ததும் கட்சித் தலைவர் அதை தடுக்காததும் கட்சியை முழுவதுமாக பெரும் பாதிப்புக்குள்ளாக்கிவிட் டது என்று இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேனாதிராஜாவிடம் சுட்டிக்காட்டினர்.

### சேனாதிராஜா கலையமுதன்

இந்த சம்பாசணைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், சிறிதரனின் சாரதி உள்ளே ஓடிவந்து சேனாதிராஜாவின் மகன் கலையமுதனும் அவரது நண்பர்களும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களது வாகனங்கள் அந்த வளாகத்துக்கு உள்ளே நிறுத்தி வைக்கப்படக் கூடாது என்று கூறினார் எனத் தெரிவித்தார். அதனால் இரு சாரதிகளும் வாகனங்களை வெளியே கொண்டு சென்று நிறுத்தி வைத்தனர். இதைக் கேள்விப்பட்டதும் சேனாதிராஜா மகனைக் கண்டித்தமையுடன் வீட்டு வளாகத்துக்குள் திருப்பி கொண்டுவந்து வாகனங்களை நிறுத்திவைக்க அனுமதிக்குமாறு சத்தமிட்டார். சிறிதரனின் வாகனம் உள்ளே கொண்டுவரப்பட்டது. ஆனால் சுமந்திரனின் சாரதி வாகனத்தை உள்ளே கொண்டு வருவதற்கு விரும்பவில்லை. அவர் கலையமுதனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு 'உங்களது அற்பத்தனமான நடத்தையின் காரணமாகவே உங்களது தந்தை தோல்வி கண்டார்' என்று கலையமுதனுக்குக் கூறினார்.

சேனாதிராஜாவின் மகனுக்கும் இரு எம்.பி.க்களினதும் சாரதிகளுக்கும் இடையில் நடந்த சம்பவம் கட்சித் தலைவருக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவுகள் சீர்கேடடைந்ததைத் துல்லியமாக வெளிக்காட்டின. சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் தகுதிவாய்ந்த பொறியியலாளர். அவர் பிரிட்டனில் வேலை செய்து கொண்டிருந்தார். அவர் சொந்த நாட்டுக்கு திரும்பி வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு தெரிவாகியதன் மூலம் அரசியலிலும் பிரவேசித்தார். கலையமுதன் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் இளைஞர் அணியின் பொதுச் செயலாளராகவும் இருக்கிறார். கலையமுதனின் பிரவேசத்துக்கு பிறகுதான் சேனாதிராஜாவுக்கும் சுமந்திரனுக்குமான உறவுகளில் கசப்பு ஏற்பட ஆரம்பித்தது. கலையமுதன்தான் முதலில் சரவணபவனுடன் கூட்டுசேர்ந்த பிறகு தனது தந்தையாருக்கும் சரவணபவனுக்கும் இடையில் தோழமையை ஏற்படுத்தினார்.

தனக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கலையமுதனும் தமிழரசுக் கட்சியின் பொருளாளர் கனகசபாபதியும் யாழ்ப்பாண மக்களுக்கு கூறியதை நிரூபிக்கும் ஒளி – ஒலிப்பதிவு சான்றுகள் தன்னிடம் இருப்பதாக சுமந்திரன் பகிரங்கமாக கூறியதும் இங்கு கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாண மத்திய கல்லூரி வளாகத்துக்குள் இருந்த பிரதான வாக்கு எண்ணிக்கை நிலையத்தில் இடம்பெற்ற கும்பல் வன்முறை பற்றி கடந்தவாரம் நான் எழுதியிருந்தேன். இந்த கும்பல்களை தூண்டிவிடுவதில் கலையமுதனும் சம்பந்தப்பட்டிருந்தார். ஆனால் வளாகத்துக்குள் அத்துமீறி பிரவேசிக்க முற்பட்ட கும்பல்களிலிருந்து தன்னை தூரவிலக்கி கொண்டார். அந்த வாக்கு எண்ணிக்கை நிலையத்தில் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அந்த வன்முறையை அடக்க பொலிஸ் கலகமடக்கும் படையையும் விசேட அதிரடிப்படையையும் வரவழைத்தார். அந்த கும்பல் வன்முறைக்கு பொறுப்பாக முன்னிலையில் இருந்து செயற்பட்ட பேர்வழிகள் விசேட அதிரடிப்படையினரால் கட்டுப்படுத்தப்பட்ட அதேவேளை, தடியடி பிரயோகத்தினால் கும்பல்கள் சிதறி ஓடின.

இந்த அமளியில் சேனாதிராஜாவின் மகனும் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அவர் விசேட அதி ரடிப் படையினால் தாக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்திலுள்ள மனிதவுரிமை அலுவலகத்தில் அவரின் நண்பரான உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான நாவலன் என்பவர் முறைப்பாடு ஒன்றை செய்தார். நேரடியாகத் தான் முறையிடுவதைத் தவிர்த்த கலையமுதன் நாவலனை தூண்டி அவ்வாறு செய்தார் என்று நம்பப்படுகிறது.

### விஷமத்தனம்

தமிழ் ஊடகங்களிலுள்ள சில விஷமத்தனமான பேர்வழிகள் தமிழரசுக் கட்சித் தலைவருக்கும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் பிளவு மேலும் ஆளமாவதற்கு உதவினார்கள். தமிழரசுக்

> தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடையத் தொடங்கியதும் தமிழரசுக் கட்சியை சேர்ந்த 4 யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரு முகாம்களாக பிளவுபட்டனர். ஒருபுறம் தமிழரசுக்கட்சியின் செயலாளர் சேனாதிராஜாவும் பத்திரிகை நிறுவன உரிமையாளர் சரவணபவனும். மறுபுறம் சிறிதரனும் சுமந்திரனும் அணிசேர்ந்து கொண்டனர். இருவரும் ஒரே கட்சியை சேர்ந்தபோதிலும் சரவணபவனின் பத்திரிகைகள் சுமந்திரனுக்கு எதிராக விஷமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தது.

கட்சியின் தலைமையில் மாற்றம் தேவைப்படுகின்றதா என்று பத்திரிகையாளர் மாநாடொன்றில் சிறிதரனிடம் கேட்கப்பட்ட போது அது அவசியமானதல்ல என்று அவர் பதிலளித்தார். நீங்கள் தமிழரசுக் கட்சியின் தலைவராக விரும்புகிறீர் களா? என்று சிறிதரனிடம் கேட்கப்பட்டபோது கட்சி ஐக் கியப்பட்டு அந்த பதவியை எனக்கு தந்தால் ஏற்றுக்கொள் ளத் தயார் என்று பதிலளித்தார். அவரின் இந்த பதில் தவறான முறையில் தமிழ்ப் பத்திரிகைகளில் பிரசுரமா கின. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக வரவிரும்பு வதற்கு சிறிதரன் விரும்புகிறார் என்று அந்த பத்திரிகைகளின் செய்திகளில் கூறப்பட்டிருந்தது.

வேறொரு பத்திரிகையாளர் சந்திப்பில் சுமந்திரனிடம் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியமா? என்று கேட்கப்பட்டது. அவரின் பதில் எதிர்மறையானதாகவே இருந்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் குறித்து ஆராய்ந்து பின்னடைவுகளுக்கான காரணங்களை இனங்காண வேண்டியதேவை கட்சிக்கு இருக்கிறது என்று கூறினார். தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராஜா யாழ்ப்பாணத்திலும் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் மட்டக்களப்பிலும் படுமோசமாக தோல்வியடைந்திருக்கிறார்கள் என்று சுமந்திரன் சுட்டிக் காட்டினார். அடுத்து அவரிடம் தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறிதரன் நியமிக்கப்படுவதை ஆதரிப்பீர்களா? என்று கேட்கப்பட்டது. சிறிதரனை தலைவராக்கும் விருப்பம் கட்சிக்கு இருந்தால் அதனுடன் ஒத்துப்போக தானும் தயார் என்று அவதானமாக பதிலளித்தார். மீண்டும் தமிழ் ஊடகங்கள் அதை தவறான செய்தியாகவே வெளியிட்டன. சிறிதரன் தமிழரசுக் கட்சியின் தலைவராக்கப்படுவதை சுமந்திரன் விரும்புகிறார் என்று பத்திரிகைகள் கூறின.

இந்த பத்திரிகையாளர் மாநாடு பற்றிய செய்திகளை பத்திரிகைகள் வெளியிட்ட விதம் சேனாதிராஜாவுக்கும் சுமந்திரன் – சிறிதரன் இரட்டையருக்கிடையில் பிளவை மேலும் அகலமாக்க மாத்திரமே உதவியது. இரண்டு வெற்றிப்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் தோல்விகண்ட சேனாதிராஜாவைப் பதம் பார்க்க நாட்டம் கொண்டிருக்கிறார்கள் என்றவாறு ஒரு அபிப்பிராயத்தை சமூக ஊடகங்கள் பரப்பின. பிறகு தேசியப்பட்டியல் எம்.பி விவகாரம் வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9ஆசனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. கூட்டமைப்பு மொத்தமாக பெற்ற வாக்குகளின் விளைவாக ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரை நியமிப்பதற்கு அதற்கு வாய்ப்பு கிட்டியது. முன்னதாக கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன் தான் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்றும் தேசியப் பட்டியல் ஊடாக நியமிக்கப்படுவதையே விரும்புவதாகவும் கூறியிருந்தார். மிகவும் வயது முதிர்ந்தவரான திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல் பிரசாரங்களின் போது ஏற்படக்கூடிய அலைச்சலையும் கஷ்டங்களையும் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றவர்கள் திகைப்படைந்தார்கள். அரசியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டத்தில் சம்பந்தனை தவிர வேறு எவரும் வெற்றிபெற முடியாது என்று அவர்கள் உணர்ந்தனர்.

அதையடுத்து சம்பந்தன் தனது நிலைப்பாட்டை தளர்த்தி தேர்தலில் போட்டியிட முன்வந்தார். ஆனால், ஒரு நிபந்தனையை விதித்தார். தன்னுடன் சேர்ந்து கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிடவிருக்கும் கதிரவேலு சண்முகம் குகதாசன் தேசியப்பட்டியலூடாக நியமிக்கப்பட வேண்டும் என்று சம்பந்தன் விரும்பினார். நீண்டகாலமாக கனடாவில் வசித்துவந்த குகதாசன் இலங்கைக்கு நிரந்தரமாக திரும்பி தனது கனேடிய குடியுரிமையை கைவிட்டார். திருகோணமலையில் திரியாய் பகுதியை சேர்ந்தவரான குகதாசன் சம்பந்தனுக்கு பெரும் உதவியாக இருந்ததுடன் கட்சிக் கிளைகளை மீளவும் ஒழுங்கமைத்தார். கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனக்குழுவும் தேர்தலுக்கு பிறகு குகதாசனை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பதற்கு இணங்கிக் கொண்டது.

### அம்பாறை மாவட்டம்

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்தை மட்டுமே பெற்றிருந்த நிலையில் அதற்கு குகதாசனே நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், திடீர் சிக்கல் ஏற்பட்டது. அம்பாறை / திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் தமிழ் எம்.பி. ஒருவரை தெரிவு செய்ய தவறிவிட்டது. அந்த மாவட் டத்தில் 19சதவீதத்தினராக தமிழர்கள் இன ரீதியான சனத்தொகையில் மூன்றாவதாக வருகின்றனர். மேலும், பெரும்பாலான தமிழ்ப் பகுதிகள் அபிவிருத்தி குன்றியவையாக இருக்கின்றன. அதனால் தமிழ் மக்களின் நலன்களை கவனிப்பதற்கு ஓர் எம்.பி. அவசியமானது.

இதேவேளை, தேசியப்பட்டியல் ஆசனத்துக்கான எம்.பியை விரைவாக தெரிவு செய்து நியமிக்குமாறு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.துரைராஜசிங்கத்தை தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டது. இதையடுத்து சம்பந்தனின் இல்லத்தில் அவசரமாக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. துரைராஜசிங்கம், சுமந்திரன், குகதாசன் ஆகியோர் பங்கேற்றனர். முறைப்படி தனக்கே உரித்தாகியிருக்க வேண்டிய தேசியப் பட்டியல்ஆசனத்தைவிட்டுக்கொடுக்கபெருந்தன்மையுடன் குகதாசன் இணங்கினார். தமிழரசுக் கட்சியை சேர்ந்த தேர்தலில் தோல்விகண்ட வேட்பாளரான தவராசா கலையரசனை தேசியப் பட்டியல் எம்.பி.யாக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. கலையரசன் தமிழரசுக் கட்சியின் ஒரு தீவிர செயற்பாட்டாளர். நாவி தன்வெளி பிரதேச சபையின் தலைவராக இருந்தார். எனவே திகாமடுல்ல மாவட்டத்துக்கு ஒரு தமிழ் எம்.பி.யை வழங்குவதற்காக கலையரசன் நியமிக்கப்பட்டார். அந்த நியமனம் தொடர்பான ஆவணங்களை தயாரித்து அனுப்பும் பணியை துரைராஜசிங்கம் செய்தார். வர்த்தமானியில் கலையரசன் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்பட்டார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசியம் முடிந்து விட்டதா? அது இட்டுக் கட்டிய கட்டுக்கதை!

## சி.வீ.கே.சிவஞானம் விளக்கம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 26

மிழ்த் தேசியம் முடிந்து விட்டதா? அப்படி இல்லை. அது இட்டுக் கட்டிய கட்டுக்கதை என்று விளக்கம் அளித்திருக்கின்றார் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம். இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் தமிழ் தேசிய அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இது அதிசயமான கருத்து. இந்த தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ் தேசியம் எந்த வகையிலும் பின்னடைவைச் சந்திக்கவில்லை. தமிழ் தேசியம் அதே நிலையில்தான் இருக்கின்றது. தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக எல்லாருமே தமிழ் தேசியத்தை சேர்ந்தவர்கள்தான் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் ஆள்கள் மாறி இருக்கிறார்களே தவிர, கோட்பாடுகள் அல்லது தமிழ் தேசியம் மாறவில்லை.

மக்கள் தேசியத்தை விட்டுப் பிரிந்து செல்லவில்லை. ஏதோ ஒரு வகையிலே தேர்தல் காலத்தில் சில விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. சில இடங்களில் – மூலைமுடுக்குகளில் – சிலர் வாக்கு வங்கியினை சேகரித்துள்ளார்கள்

அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அதுவே எங்களுடைய அரசிய லாக இருக்க முடியாது. ஆகவே நாங்கள் எல்லோரும் தொடர்ந்தும் தமிழ் தேசியம் சார்ந்து போராடுவோம்.

விமல் வீரவன்ஸ கூறுகின்றமை போல எமது தமிழ் தேசியம் தோற்றுவிட் டது அல்லது தோற்கடித்து விட்டோம் என்பது தவறான விடயம். – என்றார் சிவஞானம்.

அதேபோல் முன்னாள் போராளிக ளுக்கு இனி எந்தவித உதவியும் அரசாங் கத்தினால் வழங்கப்படாது எனக் கூறப் பட்ட கருத்து தொடர்பில் தெரிவிக்கையில்–

அரசாங்கம் முன்னாள் சொன்னதை பின்னாளில் மறுதலிக்கிற ஒரு கோட்பாடு இருக்கின்றது. விடுதலைப் புலிகள் என்ற நாமத்தை விட அவர்கள் மனிதர்கள் என்ற வகையில் அவர்களுக்கு அளிக்கப் பட்ட அநீதிகளுக்கு – அவர்களில் கொல்லப்பட்டவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்களுக்கானவற்றை மனிதநேய அடிப்படையிலாவது வழங்கி, உதவி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. அது அரசாங்கத்தின் கடமை. அதை மறுத லிப்பது எந்த வகையில் நியாயம் என்பது எனக்குத் தெரியவில்லை. அவர்கள் கொலை செய்யப் பட்டவர்கள். அவர்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டிய கடப்பாடு உள்ளது. அதை அரசு செய்ய வேண்டியது அவசியமானது. – என்றார்

---

# சரத் வீரசேகர இந்தியத் தூதருக்கு எதிராகக் கருத்து

நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக அரச தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் தூதரக அதிகாரிகளுக்கு அது தொடர்பாக அழுத்தங்களை கொடுக்க முடியாது எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபை முறையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண் டும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பெக்லே கூறியிருந்தமை தொடர்பாக நேற்றுக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை இறையாண்மையுள்ள நாடு. மக்கள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாட்டின் அரச தலைவர்களுக்கே வழங்கினார்களே ஒழிய வெளியில் உள்ள தரப்பினருக்கு வழங்கவில்லை எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

---

# பல்கலைத் துணைவேந்தர் விவரம் நாளை வெளிவரும்?

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்ப்பாணம் மற்றும் களனி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் யார் என்பது அநேகமாக நாளை வெளிவரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான புதிய நியமங்கள், நடைமுறைகள் அடங்கிய சுற்றறிக்கை கடந்த மே மாத முற்பகுதியில் வெளியிடப்பட்டிருந்தது.

புதிய சுற்றறிக்கைக்கு அமைவாகக் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் திறமை அடிப்படையில் மூன்று பேரை முன்மொழிவதற்கான விசேட பேரவைக் கூட்டங்கள் இம் மாதம் 10 ஆம் திகதி களனிப் பல்கலைக்கழகத்திலும், 12ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் இடம்பெற்றிருந்தன.

இந்த இரு பல்கலைக்கழகப் பேரவைகளினதும் பரிந்துரைகள் இம் மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டு கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதி செயலகத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு உரித்தான தத்துவத்துக்கு அமைய பரிந்துரைக்கப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை துணைவேந்தராக நியமித்து ஜனாதிபதியே அதனை அறிவிப்பார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம், களனி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர் தெரிவுகள் நிறைவுற்றிருப்பதாகவும் நாளை இது தொடர்பிலான உத்தி யோகபூர்வ அறிவித்தல் அனுப்பி வைக்கப்படலாம் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து அறியக் கிடைத்தது.

---

### அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு

# கோட்டாவின் பிரதிநிதியாக மஹிந்தானந்த நியமனம்

புதிய அரசமைப்புக் கவுன்ஸிலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரதிநிதியாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே நியமிக்கப்பட்டுள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரின் நியமனம் தொடர்பான கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சபாநாயகரின் தலைமைத்துவத்துடனான அரசமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் 10 உறுப்பினர்கள் வருமாறு:-

பிரதமர்.

எதிர்க்கட்சித் தலைவர்.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்.

சிவில் அமைப்பின் உறுப்பினர் ஒருவர்.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலை வரால் பெயர் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சியிலிருந்து ஒருவர்.

---

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

# மைத்திரியின் வீட்டுக்குச் சென்றனர் ஜனாதிபதி விசாரணைக் குழுவினர்!

கொழும்பு, ஓக 26

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவினர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்துக்கு இன்று காலை சென்றுள்ளனர்.

மைத்திரிபாலவிடம் மேற்படி தாக்குதல் சம் பவம் தொடர்பான வாக்குமூலத்தை பதிவு செய்வதற்காகவே அந்தப் பிரிவினர் அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வருமாறு முன்னாள் ஜனாபதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடந்த வாரம் விடுக்கப்பட்டிருந்த அழைப்பை அவர் நிராகரித்திருந்தார்.

தன்னால் விசாரணைக்குழுவுக்கு வர முடியாது எனவும், தனது வாக்கு மூலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின்தனது வீட்டுக்குவந்துபெற்றுக்கொள்ளுமாறும் அவர் விசாரணை குழுவுக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# பலாலி விமான நிலையம் அபிவிருத்தி: இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

### தூதுவருடன் அமைச்சர் பிரசன்ன பேச்சு

கொழும்பு, ஓக 26

யாழ். பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவுள்ளோம். ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதை அமைச்சரவையில் முன்வைத்து, அமைச்சரவையின் அனுமதியையும் பெறவுள்ளோம்.

– இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

எதிர்வரும் இரு வாரங் களுக்குள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமைச் சரவையில் முன்வைக்கவுள்ளோம் எனவும் அவர் குறிப் பிட்டார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் கூறினார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதியுடன் விரைவில் இரு தரப்பும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# சம்பந்தனுக்கு திடீர் உடல் நலக்குறைவால் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

## செல்வம் எம்.பி. சொல்கின்றார்

கொழும்பு, ஓக 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர், கொறடா தொடர்பான பதவிகள் குறித்த இறுதித் தீர்மானம் பற்றிய அறிவிப்பு என்ன? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடை பெற ஏற்பாடாகியிருந்தது. அந்தக் கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை அறிவிக்கப்படும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட் டிருந்தது. இருந்தபோதிலும் இரா.சம்பந்தனுக்கு ஏற்பட்டுள்ள திடீர் உடல் நிலை பாதிப்பால் மேற்படி கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது - என்றார்.

# வழமைக்குத் திரும்பும் கல்வி நடவடிக்கைகள்

கொழும்பு, ஓக.27

கொரோனா வைரஸ் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமை போன்று முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பவுள்ளன என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்காக காலை 7.30 முதல் மதியம் 1.30 வரை பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேபோல், தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் வழமைக்கு கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதையடுத்து, கடந்த மார்ச் மாதம் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து கொரோனா வைரஸின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து, கட்டம் கட்டமாக பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதேநேரம், நேரங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இதற்கமைய, தரம் 10 - 13 ஆகிய வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தினமும் காலை 07.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 12 பேருக்குக் கொரோனா தொற்று; நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக.27

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 971 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று இதுவரையான கலப்பகுதியில் மேலும் 12 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 05 பேர் குணமடைந்துள்ள நிலையில் தொற்றில் இருந்தும் பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 816 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 143 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை 58 பேர் தற்போது சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் கட்டாயம்

பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களை கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனூடாக பாடசாலைக் கல்வியைப் பெறும் போதே தொழில்துறைக்கான பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்த முடியும் என கல்வி மறுசீரமைப்பு மற்றும் தொலைதூரக்கல்வி தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி உபாலி சேதர குறிப்பிட்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் இதற்கான நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலைகளில் ஆலோசனை முறையை கட்டாயமாக்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாணவர்களிடையேகாணப்படக்கூடிய உளநல மற்றும் சமூக சிக்கல்களுக்கு இதனூடாகத் தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனவரி முதலான செலவினத்தை செய்யவே 72 வீதத்துக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு!

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 72 வீதத்துக்கும் அதிகமானவை இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏற்பட்ட தொடர்ச்சியான செலவினங்களுக்கானவை என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறாத நிலையில், ஆளுநர்களுக்கு பணிகளைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட்டது என்றும், ஜனவரி முதல் எந்த ஒதுக்கீடும் செய்யப்படாதயைால், தொடர்ச்சியாக செலவினங்கள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலுக்கு அரசாங்கம் தயாரா என ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அரசாங்கம் இதுவரை தேர்தல் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை என்றார்.

இதேவேளை கடந்த வாரம் மாகாண சபை முறையை யும் தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும் நீக்கு மாறும் தேசிய கூட்டு அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அரசாங்கதிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளமையால் மாகாணசபை முறையை ரத்துச் செய்ய முடியும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்திருந்தது.

தற்போது, ஒன்பது மாகாணசபைகள் அனைத்தும் அவற்றின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளமை காரணமாக செயற்படாமல் உள்ளன. குறிப்பாக தென்மாகாண சபையின் பதவிக் காலம் ஏப்ரல் 10 ஆம் திகதியும், மேல் மாகாணசபையின் பதவிக் காலம் ஏப்ரல் 21 ஆம் திகதியும் முடிவடைந்தன.

சப்ரகமுவ மாகாணசபையின் பதவிக் காலம் 2017 செப்ரெம்பர் 26 அன்றும் அதே நேரத்தில் கிழக்கு மாகா ணசபையின் பதவிக் காலம் 2017 செப்ரெம்பர் 30 அன்றும் வட மத்திய மாகாண சபையின் பதவிக் காலம் 2017 ஒக்ரோபர் முதலாம் திகதியும் முடிவடைந்தன.

அதே நேரத்தில் மத்திய, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணசபைகளின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் முடிவடைந்த அதேநேரம் ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சனத்தொகை சடுதியாகக் குறையும் என்று ஆய்வில் அதிர்ச்சித் தகவல்!

கொழும்பு, ஓக 27

இலங்கையின் சனத்தொகை தற்போதுள்ள எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2100ஆம் ஆண்டளவில் அதாவது இன்னமும் 80 ஆண்டுகளில் சரிபாதியாகக் குறைவடைந்துவிடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இலங்கையின் குழந்தைகள் பிறப்பு வீதம், இறப்பு வீத எண்ணிக்கை, குடிப்பெயர்வு மற்றும் சனத்தொகையில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஏனைய காரணிகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு 195 நாடுகளில் நடத்தப்பட்ட உலகளாவிய ஆய்வின் நிறைவில் தி லான்செற் the Lancet என்ற முன்னணி ஜேர்னல் இதழ் இந்த எதிர்வுகூறலை விடுத்துள்ளது.

இந்த ஆய்வுக்கமைய 2100ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை பத்து லட்சத்து 450 ஆயிரமாக குறைவடையும் என்ற அதிர்ச்சியளிக்கும் எதிர்வு கூறல் வெளியாகியுள்ளது.

2017ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை இரண்டு கோடியே 600 ஆயிரமாக காணப்பட்டது. 2031ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகை அதிக பட்சமான உச்சத்தை தொடும் என ஆய்வில் கூறப்பட்டுள்ளதுடன், இரண்டு கோடியே 23 இலட்சத்து 400 ஆயிரமாகக் காணப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கையின்படி 2017ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள பெண்ணொருவர் சராசரியாகப் பெற்றெடுத்துள்ள பிள்ளைகளின் அளவு 1.80 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த எண்ணிக்கை 80 ஆண்டுகளில் 1.46 ஆக குறைவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதாரப் பரிந்துரைகளில் குழந்தைகள் பிறப்பு வீதம் 2.1 என்ற சராசரி எண்ணிக்கை காணப்படின் அந்நாட்டின் சனத்தொகை வீழ்ச்சி காணும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டவிரோதமாக நாட்டுக்கு வருபவர்களால் இலங்கையில் கொரோனா பரவும் அபாயம்

கொழும்பு, ஓக.27

இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் இலங் கைக்குள் சட்டவிரோதமாக வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து அதிகமாகவுள்ளதாக அந்தப் பிரிவின் பிரதம அதிகாரி சுடத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினர் கடும் ரோந்து மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கைக்குள் வருபவர்களில் ஒருவராவது கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதனால் இலங் கைச் சமூகத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# அபாண்டக் குற்றச்சாட்டுக்களை ஆட்சேபித்து யாழ்.பல்கலை பாதுகாப்பு ஊழியர் போராட்டம்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்கள் எதிர்கொள்ளும் தேவையற்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற களவுகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு பணியில் ஈடுபட்டவர்கள் மீது ஊழியர் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து, கொரோனா தொற்று காலப்பகுதியில் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் தாங்கள் பணியாற்றிய போதிலும் தங்கள் மீது இவ்வாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைத் தொழில் சங்கம் முன்வைத்துள்ளதாக பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இதனைக் கண்டித்து நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்கள் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவோரை தவிர ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுபான்மையினருக்குப் பாதிப்பில்லாத முன்மொழிவுகளை அரசு முன்வைக்கும்!

## வியாழேந்திரன் நம்பிக்கை தெரிவிப்பு

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கக் கூடிய – சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத – அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய – முன்மொழிவு களை இந்த அரசாங்கம் முன்வைக்கும். அதற்காக இந்த அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் நன் மைக்காக உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என தபால் சேவைகள், தொழில் அபிவிருத்தி, வெகுஜன ஊடகத் துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந் திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் 08 மாகாணசபைகளை ஆளும் கட்சி கைப்பற்றும் எனவும் சிலவேளைகளில் ஒன்பது மாகாண சபைகளையும் அரசாங்கமே கைப்பற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஒரு லட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கிராமிய வீதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தற்போதுள்ள அரசாங்கம் ஓர் உறுதியாக அரசாங் கம். மூன்றில் இரண்டு பெரும்பாண்மையினை நெருங் கியிருக்கின்ற ஒரு பலமான அரசாங்கம். இந்தப் பலம் பொருந்திய அரசாங்கத்தில், இந்த மாகாணத்தில் ஓர் அமைச்சராக நாடுமுழுதும் சேவையாற்றும் வாய்ப்பு இந்த அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் ஒருபோதும் வீண டித்துவிடமுடியாது. இந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி எமது மாவட்டத்திற்கு, மாகாணத்திற்கு அரசாங்கத்தால் எமது மக்களுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்



கூடிய அதியுட்ச நன்மைகளை நாங்கள் பெற்றுக் கொடுத்தேயாகவேண்டும்.அதுதான் மக்களின் அதி கூடிய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இந்த மாகாணத்தில் மக்களின் இருப்பைப் பாதுகாப் பதற்காக வாக்களித்த அந்த மக்களை நாங்கள் ஒரு போதும் மறந்துவிடமுடியாது. அந்த மக்களால் இந்த மாவட்டமும் மாகாணமும் நன்மைபெறயிருக்கின்றது.

தற்போது எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அரசாங்கம் ஒரு விடயத்தை சொல்வதற்கு முன்பாகவே – ஒரு விட யத்தை முன்மொழிய முன்பாகவே – ஒரு விடயத்தை செயற்படுத்துவதற்கு முன்பாகவே – எதிர்க்கட்சியினர் பல்வேறுபட்ட கதைகளைத் திரிவுபடுத்தி மக்கள் மத்தி யில் பிழையான கருத்துக்களை கொண்டு சேர்ப்பதைப் பார்க்கமுடிகின்றது. எமது மக்கள் இது தொடர்பாக எந்த விதமான குழப்பமும் அடையத் தேவையில்லை.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கக் கூடிய, சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய முன்மொழிவு களை இந்த அரசாங்கம் முன்வைக்கும். அதற்காக இந்த அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் நன்மைக் காக உழைக்கத் தயாராகயிருக்கின்றோம்.

கடந்த காலத்தில் தற்போதுள்ள எதிர்க்கட்சியுடன் இணைந்துகொண்டு தங்களது அரசியல் நாடகத்தி னை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் அரங்கேற் றிய அதே தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் கட்சிகள் இன்று அதே நாடகத்தைக் கையிலெடுத்துள்ளனர். இதனை மக்கள் நன்றாகப் புரிவார்கள்.

உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை நாங்கள் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற தேர்தல் களத்தில் நாங்கள் முன்வைத்த மக்கள் எதிர்பார்ப்பு கள அரசி யல் என்ற தொனிப்பொருளுக்கு மக்கள் எங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர். அந்த அங்கீகாரத்தைச் சரியாக நாங்கள் மக்களுக்குப் பயன்படுத்தி நாங்கள் சேவைசெய்யவேண்டும்.

தேர்தல் காலங்களில் நாங்கள் கூறியவை அனைத் தும் நடைபெற்றுள்ளது. மாகாணசபை வரவிருக்கின் றது. இலங்கையில் ஒன்பது மாகாணசபை இருக்கின்றது. இதில் எட்டு மாகாணசபைகளை அரசாங்கம் கைப்பற்று வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதில் எந்தவித மான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. சிலவேளைக ளில் ஒன்பதையும் அரசு கைப்பற்றமுடியும்.

ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்று கூறிய நிலையின்று தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது. கூட்ட மைப்பை நம்பி கடந்த காலத்தில் வாக்களித்த மக்க ளுக்கு உரிமையும் இல்லை, தீர்வும் இல்லை, அபிவி ருத்தியும் இல்லை. இனிமேல் அரசியல்வாதிகள் மக் களை ஏமாற்ற நினைத்தாலும் மக்கள் ஏமாறுவதற்குத் தயார் இல்லை. அவர்கள் தயார் இல்லையென்பதை அண்மைய தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். – என்றார்.

# ஐ.நா, அமெரிக்கா, இந்தியாவின் உதவியுடன் பல்லாயிரம் மக்களைக் காப்பாற்றியிருக்கலாம்!

## அந்தநேர சமாதானத் தூதர் எரிக்சொல்ஹெய்ம் ஆதங்கம்

1998 முதல் 2009 வரை இலங் கையில் சமாதான முன்னெடுப்பு கள் குறித்து சில விடயங்களை இலங்கை அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையிலான முன்னாள் சமாதான பேச்சாளர் எரிக் சொல்ஹெய்ம் பகிர்ந் துள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தம் தொடர்பாகவும் சமாதான முன் னெடுப்புக்கள் குறித்து மார்க் சால்டர் எழுதிய நூலை டுவிட்டரில் பகிர்ந்து, ஜெயான் ஜெயதிலக்க மற்றும் மார்க் சால்டருக்கும் இடையிலான இந்த விவாதம் கற்றுக்கொண்ட பாடங்க ளைப் புரிந்துகொள்ள உதவுகிறது என குறிப்பிட்டுள் ளார்.

அந்தப் பதிவின் கீழ் இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை மற்றும் வெள்ளைக் கொடி சம்பவத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றிய முழு வெளிப்பாடு தேவை என்றும் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய ஒவ்வொரு பதிவும் பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும் என்றும் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த எரிக் சொல்ஹெய்ம், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான விடுதலைப் புலிகளின் திட்டம் மற்றும் 'வெள்ளைக் கொடி' விவகாரம் ஆகிய இரண்டின் உண்மைகளும் மார்க் சால்ட்டரின்' ஒரு உள் நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர' என்ற புத் தகத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறி னார்.

மேலும் இலங்கையில் தமிழர்கள் மற்றும் பிற இனத் தவர்களுக்கு முறையான சுய ஆட்சி மற்றும் சிறு பான்மை உரிமைகளை நிறுவ இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்றும் வன்முறை இல்லாமல், போராடநிறைய இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கடந்த காலத்தில் செய்த அதே தவறுகளை வரலாற்றில் மீண்டும் மீண்டும் செய்வதைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும் என் றும் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட் டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்றபோது அமை தியாக அதை பார்த்துக்கொண்டு தாங் கள் இருக்கவில்லை என்றும் 2009 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத்துடன் தாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது இந்திய மற்றும் அமெ ரிக்க ஆதரவுடன் அனைத்து தமிழ் பொதுமக்கள், விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள் மற்றும் பணியாளர்களை வெளியேற்ற முன் வந்தபோதும் பிரபாகரன் அதை தடுத்துவிட்டார் என்றும் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்தார்.

அத்தோடு ஏப்ரல் 2009 இல் பிர பாகரன், தமிழ் மக் கள் மற்றும் விடுதலை புலி வீரர்கள் மற்றும் பணி யாளர்களை வெளியேற்றுவது உள்ளிட்ட போருக்கு ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முடிவை மறுத்துவிட்டார்.

இன்னொன்று மே மாதம் புலி களின் அரசியல் பிரிவு தலைவர் பாலசிங்கம் நடேசன் மற்றும் புலி தேவன் ஆகியோர் சரணடைய ஒப் புக்கொண்டபோதும் 'வெள் ளைக் கொடி' சம்பவத்தில் கொடூரமாக கொலை செய்யப் பட்டனர் என்றும் இந்த இரண்டு உண்மைகளும் மறுக்க முடியாதவை என்றும் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் போரை முடி வுக்கு கொண்டுவர பிரபாகரன் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்றும் இது பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் மற்றும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கும் என்றும் எரிக் சொல் ஹெய்ம் கூறினார்.

அந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, இந்தியா அனைத் தும் ஆயுதங்கள் இல்லாமல் அனை வரையும் வெளியேற்ற எங்களுக்கு உதவ தயாராக இருந்தன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இராஜாங்க அமைச்சராக பதவியேற்றார் சுசில்!



கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மே ம்பாடு இராஜாங்க அமைச்சராக சுசில் பிரேமஜயந்த பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுசில் பிரேமஜயந்த முன்பு கல்வி, மின் மற் றும் எரிசக்தி, பெட்ரோலிய வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி அமைச்சராக பணியாற்றினார்.

புதிய அரசாங்கத்தில் 28 அமைச்சர்களும் 40 இராஜாங்க அமைச்சர்களும் நிய மிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டி ருந்தது.

இருப்பினும் கடந்த 12 ஆம் திகதி புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள 25 அமைச்சர்களும் இரா ஜாங்க அமைச்சர்கள் 39 பேரும் மட்டுமே கண்டியில் பதவியேற்றிருந்தனர்.

இந்நிலையில் தற்போது சுசில் பிரேம ஜயந்தவுடன் சேர்த்து 40 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக தமிழ்த் தலைமை அரசுடன் பேசவேண்டும்!

## என்கிறார் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைரெட்ணம்

மாகாண சபைகளில் காணி பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்குத் தமிழ்த் தலைமைகள் வரவேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா மன்றக் காரியாலயத்தில், நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் – இது ஒரு பௌத்த நாடு என்று ஜனாதிபதி சொல்லும் அளவுக்கு அரசியல் ரீதியாகப் பலம்மிக்க ஓர் அரசாங்கம் ஆளும் கட்சி ஆட்சி அமைத்து உருவாக்கியிருக்கின்றது. இது சிறுபான்மையினருக்கு நன்மையா? தீமையா? என்று பார்க்கும் போது இலங்கையில் பல மொழி, பல கலாசாரம், பல இனங்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் ஜனாதிபதி பௌத்த நாடாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிப்பது சிறுபான்மையினரால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி இந்தளவுக்கு சென்றுள்ளார் என்ற கேள்வி அரசாங்கத்துக்கு வாக்களித்த தமிழ் மக்களைத் தொக்கி நிற்கின்றன. எனவே, இந்த கொள்கையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற பூதாகரமான விடயம் இது ஒரு பௌத்த நாடு எனவும் 19 ஆவது திருத்தச்சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் அல்லது இல்லாமல் ஆக்கப்பட வேண்டும் எனவும் சிறுபான்மை இன மக்களுக்காக இலங்கை இந்திய அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக நாட்டிலுள்ள 9 மாகாணங்களில் அமுலில் உள்ள மாகாண சபை முறைமை ஆகிய இந்த 3 விடயங்கள்; இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாக மட்டுமல்ல உலக நாடுகளில் பேசப்படும் விடயமாக ஒரு பேசு பொருளாக மாறியிருக்கின்றன.

13 ஆவது திருத்தச்சட்டம் 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக முழு நாட்டிலும் மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதில் இலங்கையிலுள்ள 9 மாகாணத்தில் 7 மாகாணத்தில் தெரிவு செய்யப்படுகின்ற முதலமைச்சர்கள் சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு முஸ்லீம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவரும் வடக்கு மாகாணத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழரான ஒரே ஒரு தமிழர் இலங்கையில் முதலமைச்சராக இருந்திருக்கின்றார்கள்.

மாகாண சபையின் கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்து முதலமைச்சர் அமுலாக்கப்படும் போது அது அரச இயந்திரங்கள் மூலமாகவே அமுலாக்கப்படும். அரச நிர்வாகம் என்பது இந்த நாட்டில் சுயாதீனமாகச் செயற்படுகின்ற ஓர் அமைப்பு. எனவே இந்த விடயத்தில் தமிழர்களைச் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

என்ன கொள்கைகளை மக்கள் பிரதிநிதிகள் தீர்மானித்தாலும் அதை அமுல்படுத்துவது அரச நிர்வாகம் ஊடாக என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த 13 ஆம் திருத்தச் சட்ட மாகாண சபை முறைமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈபி.டி.பி. கட்சி, சி.சந்திரகாந்தன் ரி.எம்.வி.பி. கட்சி, மலையகத் தமிழ்க் கட்சிகள், 31 வருடத்துக்கு பிற்பாடு இதை ஏற்றுக் கொண்டு அமுல்படுத்தப்பட வேண்டும் என இந்திய அரசாங்கத்திடமும் இலங்கை அரசாங்கத்திடமும் தமிழ் தலைமைகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன. 31 வருடத்திற்கு பிற்பாடு தான் தமிழ் தலைமைகளும் பேசுகின்ற அளவிற்கு அது வளர்ச்சியடைந்திருக்கின்றது.

நான் 3 தடவைகள் மாகாண சபையில் இருந்தவன் என்ற அடிப்படையில் இந்த மாகாணசபை முறைமையில் கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, விவசாயம், நீர்ப்பாசனம், இன்னும் பல விடயங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கம் பல அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்கியிருக்கின்றது ஆனால் 31 வருடங்களாக காணி, பொலிஸ் தொடர்பான அதிகாரங்கள் அமுல்படுத்தப்படவில்லை.

ஆனால் இரண்டும் அமுல்படுத்தப்படவில்லை என்பதற்காக இந்த இரண்டு விடயங்களில் நாங்கள் முரண்படாமல் இந்திய இலங்கை அரசுகள் ஊடாக இந்த காணி பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் தான் நாங்கள் எதிர்காலத்தில் பல நல்ல விடயங்களை மாகாணசபை முறைமையில் வாய்ப்புக்களாக்க முடியும். எனவே 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகின்ற தலைமைகள் காணி பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் பேசி ஒரு பகை முரண்பாடு இல்லாதவாறு ஓர் இணக்கப்பாட்டுக்கு வரக் கூடியவாறு அதை செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன் – என்றார்.




# தேர்தல் தோல்விக்கு பின்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், தமிழரசுக் கட்சித் தலைவர் சேனாதிராஜாவுக்கு வேறு சிந்தனை இருந்தது. கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட கிளையினால் அவசர அவசரமாக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டு தேர்தலில் தோல்வி கண்ட தலைவர் மாவை சேனாதிராஜாவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. சேனாதிராஜாவின் வலது கரமாகவும் இடது கரமாகவும் கருதப்படுகின்ற வடமாகாண சபையின் முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானமும் கட்சியின் யாழ்ப்பாண கிளையின் தலைவர் கனகசபாபதியும் மாவை சேனாதிராஜாவை நியமிக்க கோரும் தங்களது தீர்மானத்துடன் திருகோணமலைக்கு சென்றனர். தன்னை நியமிக்குமாறு சம்பந்தனையும் துரைராஜசிங்கத்தையும் வலியுறுத்தி சேனாதிராஜா தொலைபேசியில் பேசினார். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு தான் விரும்பவில்லை என்றும் ஆனால், தான் எம்.பி.யாவதை விரும்புகின்ற கட்சியின் உறுப்பினர்களின் விருப்பத்துக்குத் தலைபணிய வேண்டியிருப்பதாகவும் சேனாதிராஜா கூறினார். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விரும்புகிறார் என்பது தெரிய வருகிறது. ஆனால், அவரின் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

### நாலு கட்சி கூட்டணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015ஆம் ஆண்டில் ஒரு நான்கு கட்சி கூட்டணியாக இருந்தது. அந்தத் தேர்தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) கூட்டமைப்பின் ஓர் அங்கமாக இருந்தது. 2015 பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. கூட்டமைப்புக்கு அப்போது கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றுக்கு தன்னை நியமிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், அது தமிழரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொட் தலைவர்களினால் நிராகரிக்கப்பட்டது. தோற்கடிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு நியமிப்பதென்பது விரும்பத்தகாத ஒரு நடைமுறை என்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். மேலும் கட்சித் தலைவர்கள் நியமன எம்.பிக்களாக வராமல் இருப்பதன் மூலமாக ஒரு முன்மாதிரியாக நடக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இறுதியில் அவ ரது கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது.

இந்த சூழ்நிலைகளின் கீழ் தோற்கடிக்கப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்க முடியாது. தவிரவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத்தில் ஆதரவை பெருமளவில் இழந்தநிலையில், 25 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்த வடமாகாணத்தை சேர்ந்த ஒருவருக்கு அனுகூலமான முறையில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்படக்கூடிய வாய்ப்பை இல்லாமல் செய்யும் நடவடிக்கை அரசியல் தற்கொலைக்கு சமமானதாக இருந்திருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சேனாதிராஜாவுக்கு மறுக்கப்பட்ட நிலையில், கடுமையாக ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றார். ஓகஸ்ட் 15ஆம் திகதி சம்பந்தனின் திருகோணமலை இல்லத்தில் 9 உறுப்பினர்களை கொண்ட அரசியல் குழு கூடியபோது தமிழரசுக் கட்சியின் தலைவர் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் நியமிப்பதில் சரியான நடைமுறையை கடைபிடிக்கவில்லை என்பதற்காக கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கத்தை அவர் திட்டித் தீர்க்கத் தொடங்கினார். இந்த விவகாரம் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார். கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான ரெலோவுடனும் புளொட்டுடனும் கலந்தாலோசனை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறினார். ஆனால், தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவில் பெரும்பான்மையானவர்கள் சேனாதிராஜாவை ஆதரிக்கவில்லை. தேசியப் பட்டியல் நியமனப் பிரச்சினை வவுனியாவில் ஓகஸ்ட் 29ஆம் திகதி கூடவிருக்கும் மத்திய செயற்குழுவில் ஆராய்வுக்கு எடுக்கப்படும் என்று கட்சியின் தலைவர் கூறினார்.

கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளும் இந்த பிரச்சினையில் சேனாதிராஜா சார்பில் முண்டியடித்துக் கொண்டு தலையிட்டார்கள். கொழும்பில் ஓகஸ்ட் 22ஆம் திகதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூடும்போது எம்.பி. நியமனம் தொடர்பான பிரச்சினையை கிளப்பப்போவதாக ரெலோ தலைவர் அடைக்கலநாதனும் புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஊடகங்களுக்கு கூறினார்கள். கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து சம்பந்தனையும் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரனையும் நீக்குவதற்கான கோரிக்கையையும் புளொட்டும் ரெலோவும் முன்வைக்கும் என்றும் கூடவே செய்திகள் தெரிவித்தன. சேனாதிராஜாவும் அந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்தார்.

கட்சிக்குள் தனது எதிரிகள் என்று தான் நினைக்கின்றவர்கள் மீது தாக்குதல் தொடுக்க தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராஜா உறுதி பூண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. சரவணபவன், சி.வி.கே.சிவஞானம் போன்றவர்களினாலும் மகன் கலையமுதனினாலும் இந்த பாதையில் சேனாதிராஜா ஊக்குவிக்கப்படக்கூடியமை பெரிதும் சாத்தியம். அதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு எதிராகவும் யாழ்ப்பாண மத்திய கல்லூரி வளாகத்தில் காடைத்தனத்தில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சியின் வேறு உறுப்பினர்களுக்கும் எதிராக தமிழரசுக் கட்சியின் தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வைக்கும் தங்களது முயற்சிகளை சுமந்திரன் – சிறிதரன் இரட்டையர் தொடர்ந்து முயற்சிகளில் விடாபிடியாக ஈடுபடுவது சாத்தியம். கும்பலின் வன்செயல் பற்றிய சான்றுடனான இறுவட்டு ஒன்றை சேனாதிராஜாவுக்கு சிறிதரன் கையளித்திருந்தார். தனக்கு எதிரான சரவணபவனின் நடவடிக்கையின் விவரங்களுடன் கூடிய எழுத்துமூல முறைப்பாடொன்றையும் கொடுத்த சிறிதரன் அவரைத் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். சுமந்திரனும், வன்னி மாவட்ட வேட்பாளர் டாக்டர் பி.சத்தியலிங்கம் போன்ற வேறுபலரும் சரவணபவனைக் கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவளிப்பது சாத்தியம். சத்தியலிங்கமும் சரவணபவனின் பத்திரிகைகளினால் தாக்கப்பட்டிருந்தார். அவரும் சிறிதரன் போன்று முறைப்பாட்டை கையளித்து அவரை வெளியேற்ற வேண்டும் என்று கோருவார்.

### அனல் பறப்பது நிச்சயம்

ஓகஸ்ட் 29 வவுனியாவில் நடைபெறவிருக்கும் 52 உறுப்பினர்களை கொண்ட மத்திய செயற்குழுவின் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கத்துக்கும் ஏனையவர்களுக்கும் எதிராக சேனாதிராஜா குற்றச்சாட்டுகளை சுமத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் சிறிதரன் மற்றும் சுமந்திரன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தரப்பு நிலைப்பாடுகளை சான்றுகளுடன் முன்வைப்பதும் சாத்தியம். அவ்வாறு நடந்த கூட்டத்தில் அனல் பறப்பது சாத்தியமானால் தமிழரசுக் கட்சியின் தலைவர் அசௌகரியமான நிலைக்குத் தள்ளப்படுவார்.

மாவை சேனாதிராஜா மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்படுவார் என்றும் அவசரமாக தவறுகளை திருத்திக் கொள்ளக்கூடிய அணுகுமுறையை கடைபிடிப்பார் என்றும் அவரின் நீண்ட காலமாக தெரிந்தவர் என்ற முறையிலும் இலங்கை தமிழ் மக்களின் நலன்களை மனதில் கொண்ட ஒருவன் என்ற வகையிலும் நான் பெரிதும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன். அதே போன்று சுமந்திரன், சிறிதரன் போன்றவர்களும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரதான அரசியல் இயக்கமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரதூரமான பேரிடருக்கு உள்ளாவதை தடுப்பதற்கு மிகுந்த கட்டுப்பாட்டுடனும் விவேகத்துடனும் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# வரலாற்றை யாரும் மறைக்க முடியாது உண்மைகளை ஏற்றேயாக வேண்டும்!

## தெற்குக்கு அடித்துக் கூறுகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



வரலாற்றை மறைக்க முடியாது. உண்மைகள் வெளி வருவதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக இனவாத ரீதியான செயற்பாடுகள் கருத்துக்கள் முன் னெடுக்க முடியாது. கண்டியை ஆட்சி செய்த கடைசி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கன் கடைசியாக கையொப்பம் இட்டது தமிழிலேயே எனவும் இன்றும் தலதா மாளிகையில் அதனை பார்க்க முடியும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் இணைப் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்த காலத்தில் இலங்கை யில் நீதிமன்ற மொழியாக தமிழே காணப்பட்டதாகவும், சிங்களம் வளர்ச்சி அடையாத மொழியாகவே இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ் ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருந்து தெரி விக்கும் போதே சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் விக்கினேஸ்வரன் ஆற்றிய உரை குறித்து தெற்கில் இனவாத பிரச்சாரங்கள் முன் னெடுக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் வரலாறுகளை யும் உண்மைகளையுமே அவர் பேசியிருக்கின்றார்.

ஆனால் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு தெற்கி லுள்ளவர்கள் தயாரில்லை. அதனாலேயே இன ரீதி யான பிரச்சாரங்களை அவர்கள் முன்னெடுத்து வரு கின்றனர். ஆகவே வரலாறுகள் மறைக்கப்பட முடியாது என்பதுடன் உண்மைகளை அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

மேலும் காணாமல் போனோர் விடயத்தில் அரச தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்காத அதே நேரத்தில் நையாண்டி பண்ணுவது, ஏளனம் செய்வது போன்ற கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக காணாமல் போனவர்கள் என்று யாரு மில்லை, வெளிநாடுகளுக்குப் போயிருக்கலாம் என்ற வகையில் அமைச்சர் கெஹெலிய கூறியிருக்கின்றார். கையளித்தவர்களையும் சரண்டைந்தவர்களையுமே கேட்கிறோம். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்று கேட்டுத்தானே உறவினர்கள் போராடி வருகினறனர். அவர்களுக்குப் பதில் கூறுவது மட்டுமல்ல நீதி கிடைக்க வேண்டும்.

இதனை வலியுறுத்தி எதிர்வரும் 39 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்தப் போராட்டத் திற்கு நாமும் ஆதரவை வழங்குவ துடன் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.- என்றார்.

## பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான இந்திய உடன்பாடு அமைச்சரவை அங்கீகாரத்துக்கு



கொழும்பு,ஓக.27

யாழ்ப்பாண பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய் வதற்காக இந்திய அரசாங்கத்துடன் கைச்சாத்திட எதிர்பார்த்துள்ள புரிந் துணர்வு உடன்படிக்கை அமைச்சர வையின் அனுமதிக்காக சமர்ப்பிக் கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 வார காலப்பகுதிக் குள் இந்த உடன்படிக்கை அமைச்ச ரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகருக் கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விற்கும் இடையில் நேற்று முன்தினம் சுற்றுலாத்துறை அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரை யாடலில் அமைச்சர் இந்த விட யத்தைக் குறிப்பிட்டார்.

புதிய அரசாங்கத்தின் சுற்று லாத்துறை அமைச்சராக நிய மிக்கப்பட்டுள்ள பிரசன்ன ரண துங்கவிற்கும் விமான சேவை கள் மற்றும் ஏற்றுமதி வசதி வலய இராஜாங்க அமைச்சராக நிய மிக்கப்பட்டுள்ள ரி.வி.சானக்க ஆகியோருக்கு நல் வாழத்துக் களை இந்திய தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு இரு நாடுகளுக்கிடை யிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை சட்டமூலத்துக்கான நடவடிக்கை தற்பொழுது பூர்த்தி செய் யப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இரு தரப் பினருக்கு இடையிலான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டு பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப் படும் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## இலங்கையுடனான நல் உறவை வலுப்படுத்த பிரித்தானியா ஆர்வம்!



இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்த பிரித்தானியா அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய பதில் உயர் ஸ்தானிகர் லிசா வன்ஸ்டல் தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) காலை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வைச் சந்தித்து கலந்துரையாடியபோதே பதில் உயர் ஸ்தானிகரால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு பின்னர் உலகம் படிப்படியாகத் தயாராகி வருவதால், பொரு ளாதாரத்தை மீட்டெடுப்பதே தற்போது நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது என பிரதமர் ராஜபக்ஷ பதில் உயர் ஸ்தானி கருக்கு எடுத்துரைத்தார்.

குறிப்பாக, வர்த்தக உறவுகளை மேம் படுத்துதல், முதலீடுகளை ஊக்குவித்தல், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகி யவை முன்னுரிமை விடயங்கள் தொடர்பா கப் பிரதமர் கூறினார்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னர் இலங்கையுடன் உறவுகளைப் பேணுவதில் பிரித்தானிய அரசாங்கமும் அமைச்சர்களும் ஆர்வமாக உள்ளனர் என பிரித்தானிய பதில் உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

மேலும் பிரித்தானியாவின் சர்வதேச வர்த்தக அமைச்சர் ரணில் ஜெயவர்தன இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்த கத்தை மேலும் மேம்படுத்துவதில் ஆர்வ மாக உள்ளார் என்றும் பதில் உயர் ஸ்தானி கர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த சந்திப்பின்போது இரு வரும் துறைமுக நகரத்தின் முன்னேற்றம், முதலீட்டை ஈர்த்தல், கிராமப்புற பொருளா தாரம் மற்றும் நிலையான விவசாயம் தொடர் பாகவும் பேசப்பட்டதாக பிரதமர் அலுவல கம் தெரிவித்துள்ளது.

## இரண்டு தலைகளுடன் பிறந்த ஆட்டுக்குட்டி!

புத்தளம் - ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் இரண்டு தலைகள், நான்கு கண்களுடன், ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது. இந்த ஆட்டுக்குட்டியுடன் மேலும் இரு குட்டிகள் பிறந்துள்ளன.

ஓய்வு பெற்ற இராணுவ வீரர் ஒருவரினால் வளர்க்கப்படும் ஆடு ஒன்றே இந்தக் குட் டியை ஈன்றுள்ளது. நேற்று முன்தினம் காலை பிறந்த இந்த அபூர்வ ஆட்டுக்குட்டி மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

விசித்திரமான தோற்றத்துடன் பிறந்துள்ள இந்த ஆட்டுக்குட்டியை பார்வையிட அந்தப் பகுதி மக்கள் பெருமளவு வந்து செல்கின்றனர்.





## 426 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் பரவல் கார ணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 426 இலங்கையர்கள் நாடு திரும் பியுள்ளனர்.

கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளில் இருந்து அவர்கள் நேற்று (புதன் கிழமை) காலை மத்தள மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங் களை வந்தடைந்தனர்.

இதன்போது, கட்டார் நாட்டில் இருந்து 296 பேரும் ஜேர்மனியில் இருந்து 102 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 23 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாட்டுக்கு வந்த அனைவருக்கும் பி.சீ.ஆர்பரிசோதனைமேற்கொள்ளப் பட்டதையடுத்து, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

### அமிர் பிறந்த தின நினைவு நிகழ்வு

மறைந்த தமிழரசுக் கட்சி யின் தலைவர் அமிர்தலிங்கத் தின் 93 ஆவது பிறந்தநாளை யொட்டி நேற்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன் னால் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய் யப்பட்டது. அரசியல் பிரமுகர் கள் மற்றும் அப்பிரதேச மக் கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.08.2020 இல் வெளியிடப்பெற்றது.